பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 16 வெள்ளிக்கிழமை (30.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 214

## கண்காணிப்புக் குழுவில் மாற்றம் செய்வது குறித்து நேற்றைய ஒஸ்லோ கூட்டத்தில் எந்த முடிவும் இல்லை

ஒஸ்லோ,ஜூன் 30

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று நோர்வே அனுசரணையாளர்கள் ஒஸ்லோவில் கூட்டிய கூட்டத்தில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்ததை அடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான மூன்று நோர்டிக் நாடுகளையும் அதிலிருந்து அப்புறப்படுத்துமாறு விடுதலைப் புலிகள் கேட்டிருந்தனர்.

இதனைச் செய்வதற்கு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிவரை நோர்வேத் தரப்புக்குப் புலிகள் கால அவகாசத்தையும் வழங்கி இருந்தனர்.

இந்த நிலையில் -

கண்காணிப்புக் குழுவின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக ஒஸ்லோவில் நேற்று கூட்டப்பட்ட கூட்டத்தில் நோர்டிக் நாடுகளான நோர்வே, ஐஸ்லாந்து, சுவீடன், பின்லாந்து, டென்மார்க் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட (14 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் பொறுப்பற்ற போக்கால் மக்கள் அல்லல்படும் நிலைமை

## இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து கடும் விசனத்துடன் மன்னிப்புச்சபை அறிக்கை

லண்டன்,ஜூன் 30

**இலங்கையில் அதிகரித்து வரும் வன்செயல்கள், மனித உரிமை மீறல்கள் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் மேலும் துன்பப்படுகின்றனர் எனத் தெரிவித்திருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, போதிய பாதுகாப்பை வழங்குவதற்கு அரசு தவறிழைத்து வருவதும், பொது மக்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவோரை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனைக்குட்படுத்துவதற்குத் தவறுவதும் சாதாரணமக்கள் மத்தியில் பய பீதியை ஏற்படுத்தி அவர்களைப் பெரும் அல்லல்பட வைத்துள்ளது என்றும் கடும் விசனத்துடன் சுட்டிக்காட்டியிருக்கிறது.**

லண்டனைத் தளமாகக்கொண்டியங்கும் மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பான சர்வதேச மன்னிப்புச்சபை கடந்த புதன் கிழமை இலங்கை நிலைவரம் தொடர்பாக விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

மன்னிப்புச் சபையின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

இடம்பெயர்ந்து வாழுகின்ற ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வன்செயல்களின் தீவிரம் காரணமாக இலங்கையில் (14 ஆம் பக்கம் பார்க்க)

### நாளைய உதயனில் கல்விச் சுடர்

*அன்புசால் மாணவர்களே!*

எங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் கடந்த இரு மாதங்களாக வெளிவராதிருந்த மாணவர் வழிகாட்டியான கல்விச் சுடர் மீண்டும் நாளைமுதல் உங்கள் அபிமான நாளிதழ் உதயனில் வெளிவருகின்றது.

அந்த வகையில் நாளை முதல் கல்விச சுடரில் தேசிய ரீதியில் புகழ்பூத்த கொழும்பு மாவட்ட பிரபல ஆசிரியர் உதயனுக்காக விசேடமாகத் தயாரித்த தரம் 5 மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு உதவும் வகையில் 'கடினமான வினாக்களுக்கு இலகுவாக விடை காணும் அணுகுமுறை' (Easyway method) உதயனில் வெளிவரவுள்ளது.

- ஆசிரியர்.

### நவாலியில் சூடு; ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜூன்30

நவாலி வடக்குப் பகுதியில் நேற்றிரவு 7.30 மணியளவில் ஆயுத தாரிகளால் ஒருவர் சுடப்பட்டு படுகாயம் அடைந்தார்.

அதேயிடத்தைச் சேர்ந்த இளையதம்பி வன்னியசிங்கம் (வயது 43) என்பவரே சூட்டுக்கு இலக்காகி காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தினபுரியில் தமிழர் வீடுகள் மீது தாக்குதல்!

இரத்தினபுரி,ஜூன் 30

இரத்தினபுரி எகலியகொட பிரதேசத்தில் பம்பேகமுவ தோட்டத்தில் வசிக்கும் தமிழ் மக்களின் வீடுகள் சிங்களவர்களால் தாக்கப்பட்டிருக்கின்றன. நேற்றுமுன்தினம் இரவு தமிழர்களின் லயன் வீடுகளுக்குள் புகுந்த சிங்களக் கிராமவாசிகள் கண்டபடி தாக்கி வீடுகளையும் அங்கிருந்த உடைமைகளையும் நாசமாக்கினர் என்று கூறப்படுகிறது.

சிங்களக் கிராமவாசிகள் தாக்குதல் நடத்தத் தொடங்கியவுடன் நூற்றுக்கணக்கான தோட்டத் தமிழ்க் குடும்பங்கள் தங்கள் வீடுகளை விட்டு ஓடி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தன. அவ்வாறு வீடுகளை விட்டு வெளியேறிய குடும்பங்கள் அங்குள்ள ஆலயம் ஒன்றில் நேற்று தங்கியிருந்தன.

இரு இனங்களையும் சேர்ந்த கிராமவாசிகள் இருவரிடையே ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறியதை அடுத்தே அப்பகுதியில் தமிழர்களின் வீடுகள் தாக்கப்பட்டன என்று ஒரு தகவல் தெரிவித்தது. எனினும், இராணுவத்தின் மூத்த தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் பாரமி குலதுங்க உயிரிழந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து தோட்டப் பகுதிகளில் உருவாகி இருந்த இனமுறுகல் நிலைமையே பின்னர் (14 ஆம் பக்கம் பார்க்க)

## தயா சந்தகிரி நியமனத்துக்கு எதிராக இடைக்காலத்தடை!

கொழும்பு,ஜூன் 30

முன்னாள் கடற்படைத் தளபதியும், பாதுகாப்புப் படைகளின் முன்னாள் பிரதம அதிகாரியுமான ரியர் அட்மிரல் தயா சந்தகிரியைப் பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளராக நியமித்தமைக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை உயர் நீதிமன்றம் நேற்று விதித்தது.

கண்டிப் பகுதியைச் சேர்ந்தவரும், சட்ட நிறுவனம் ஒன்றில் பணி புரிபவருமான சார்ள்ஸ் பீற்றர் விஜின் என்பவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட பின்னரே நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவை விடுத்தது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நிஸங்க உடலாகம, நிமால் திஸநாயக்க ஆகியோரைக்கொண்ட நீதிமன்றமே இந்த இடைக்கால உத்தரவை விடுத்தது.

இந்த மனுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தயா சந்தகிரி, அமைச்சரவை (14 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சு.கவின் புதிய கொள்கை விரைவில்

### தலைமைப் பொறுப்பேற்ற கையோடு ராஜபக்ஷ நடவடிக்கை

கொழும்பு,ஜூன்30

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் புதிய கொள்கையொன்றை வகுப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

தேசியப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதுவரை தனியான கொள்கையொன்றைக் கொண்டிருக்கவில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டமைப்பில் அங்கம் வகித்ததால் சுதந்திரக் கட்சி இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கையினையே பின்பற்றி வந்தது.

இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கட்சிக்குள் தேசியப் பிரச்சினை குறித்தான கொள்கையொன்றை வகுக்க உத்தேசித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி சிரேஷ்ட நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை நியமித்து இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவர் பணிப்புரை விடுக்கவுள்ளார் என்றும் அறிய முடிந்தது.

(ஐ)

## யாழ்., கிளிநொச்சி முஸ்லிம்களின் நலன் பேணவென புதிய அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பிரதேச முஸ்லிம் மக்களின் நலன்களைக் கவனிக்க 'முஸ்லிம் மக்களின் அபிவிருத்தி நிறுவனம்' என்ற அமைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

பளை பிரதேச செயலக மண்டபத்தில் மௌலவி எஸ்.எம்.ஸஹீல் தலைமையில் நடந்த கூட்டத்திலேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. உலமாக்கள், வர்த்தகர்கள், யாழ்.பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண் (14 ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

அம்பாறை மாவட்டம் கல்முனைப் பிரிவிலுள்ள பாண்டிருப்பு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தயாநிதி கேதீஸ்வரன் (வயது-29) என்பரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார். நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 8 மணியளவில் பாண்டிருப்பு அரசடி வீதியிலுள்ள தமது வீட்டில் இருந்தபோது அங்கு வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இவர் மீது பிஸ்ரலால் சுட்டு விட்டுத் தப்பிவிட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு கல்முனை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஹர்த்தாலன்று பணிக்கு வராதோர் கடமை நீங்கியவராக கருதப்படுவர்

## திருமலை அலுவலகங்களுக்கு சுற்றறிக்கை

திருகோணமலை ஜூன்30

திருகோணமலையில் நேற்று முன்தினம் நடந்த ஹர்த்தாலின் போது பணிக்கு வராத ஊழியர்கள் தாமாகவே கடமையில் இருந்து நீங்கியவர்களாக கருதப்படுவார்கள் என்று மாகாண சபை பிரதம செயலாளர் திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றறிக்கையை நேற்று அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய பணிப்புரையின் கீழ் மாகாண சபை பிரதம செயலாளர் இச்சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார்.

வடக்கு-கிழக்கு ஆளுநராக ஓய்வு பெற்ற இராணுவத்தளபதி மொஹான் சமரவிக்கிரமவும், அரச அதிபராக ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் றஞ்சித் சில்வாவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனைக் கண்டித்தும், வடக்கு கிழக்கில் சிவில் நிர்வாகத்தை இராணுவ மயமாக்குவதைக் கண்டித்தும் திருகோணமலையில் நேற்றுமுன்தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் திருமலை மாவட்டத்தில் பணிக்கு வராத அரச ஊழியர்கள் கடமையிலிருந்து தாமாகவே விலகியவர்களாகக் கருதப்படுவார்கள் என்று பிரதம செயலாளர் திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். (151)

# ஹர்த்தால் பிரசுரம் வாசித்தனராம்; 4 அரசு ஊழியர்கள் திருமலையில் கைது!

திருகோணமலை,ஜூன்30

ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்து வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தை வாசித்துக் கொண்டிருந்த அரச ஊழியர்கள் நால்வரை பொலீஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் திருமலை நகரப் பகுதியில் ஹர்த்தால் தொடர்பான துண்டுப் பிரசுரத்தை சிலர் விநியோகித்தனர். அப்போது அங்கு நின்ற திருமலை செயலக ஊழியர்கள் மூவரும், மாகாண சபை ஊழியர் ஒருவரும் தமது கைகளில் கிடைத்த துண்டுப் பிரசுரத்தை வாசித்தனர். அப்போது அங்கு வந்த பொலீஸார் ஹர்த்தால் பிரசுரம் வைத்திருந்தனர் என்று கூறி அவர்கள் நால்வரையும் கைது செய்தனர்.

திருமலை நீதிமன்றத்தில் நேற்று அவர்களைப் பொலீஸார் ஆஜர் செய்தனர். அவர்களை நீதிவான் தலா 3 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 2 பேரின் சரீரப் பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

## கிராம அலுவலருக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்30

யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவிருந்த யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

# திருட்டுச் சந்தேக நபர்கள் மூவர் யாழ்.நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்

யாழ்ப்பாணம்,ஜூன் 30

திருட்டில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மூவர் யாழ்.நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

குருநகர் மத்தியூஸ் வீதியில் உள்ள வீடொன்றில் திருடினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் திருநகரைச் சேர்ந்த இந்த மூவரையும் பொலீஸார் கைது செய்திருந்தனர்.

வீட்டு யன்னலை உடைத்து உள்நுழைந்து இரண்டு லட்சத்து 23 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் களவாடினார்கள் என சந்தேக நபர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

சந்தேக நபர்கள் மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இவர்கள் இதற்கு முன்னர் குற்றச் செயல்களில் ஈடுபட்டார்களா என அறிவதற்கு மூவரின் கைவிரல் அடையாளங்களைப் பெற்று கைவிரல் அடையாளப் பதிவாளருக்கு அனுப்பி வைக்குமாறு பொலீஸாருக்கு யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார். அத்துடன் சந்தேக நபர்களை எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறும் பணித்தார்.

சந்தேக நபர்களிடம் கைப்பற்றப்பட்ட ஒரு சில நகைகள் நீதிமன்றத்தால் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டன.

# பாடசாலைகளில் குண்டு என்று புரளி கிளப்பிய இருவர் கைது!

கொழும்பு, ஜூன் 30

பாடசாலைகளில் வெடி குண்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று தொலைபேசி ஊடாக வதந்தி பரப்பியவர்கள் எனக் கூறப்படும் இரு சந்தேக நபர்களைப் பொலீஸார் கைது செய்திருக்கின்றனர்.

கைதான இருவரும் வத்தளை-மாபோல மற்றும் வடக்கு கோட்டைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவருகிறது.

இரத்தினபுரி பிரதேச பாடசாலை ஒன்றில் குண்டு வைக்கப்பட்டிருக்கின்றது என்ற தகவலை இவர்கள் இருவரும் கைத்தொலைபேசி மூலம் பரப்பினர் என்றும் குறித்த தொலைபேசி இலக்கத்தைக் கொண்டு விசாரணை நடத்திய பொலீஸார் இருவரையும் கைது செய்தனர் என்றும் கூறப்படுகிறது. இருவரும் தற்சமயம் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை -

இதுபோன்று வதந்தி பரப்பிய மற்றொரு குழுவினரைப் பொலீஸார் தேடிவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலும் முக்கிய நகரங்களிலும் பாடசாலைகளில் வெடிகுண்டுகள் இருப்பதாக நேற்று முன்தினம் காலை பரப்பப்பட்ட வதந்தியால் கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தமை தெரிந்ததே.

(ஐ)

# கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கு நேர்முகப்பரீட்சை

## மாகாணக் கல்விச் செயலாளர் அறிவிப்பு

திருகோணமலை, ஜூன் 30

கல்வியியற் கல்லூரிகளில் மூன்று வருடகாலப் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்து, கற்பித்தல் தொடர்பான தேசிய டிப்ளோமா சான்றிதழ் பெறுவதற்கு தகுதி பெற்றவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள அதிகஷ்ட, கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறுபவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை இதுவரை காலமும் திருகோணமலையிலுள்ள மாகாணக்கல்வி அமைச்சில் நடைபெற்றுவந்தது.

எனினும், வடக்கு-கிழக்கில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையை அடுத்து, சம்பந்தப்பட்டவர்கள் வசிக்கும் மாவட்டங்களில் நேர்முகப் பரீட்சை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ். கல்வி வலயத்திலும் -

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு கிளிநொச்சி கல்வி வலயத்திலும் -

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மன்னார் கல்வி வலயத்திலும் -

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வவுனியா தெற்கு கல்விவலயத்திலும் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம், நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதி பற்றிய விபரங்களை பரீட்சார்த்திகள் கேட்டு அறிந்து கொள்ளலாம் என்று கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலிருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர், முகவரி பற்றிய விபரம் வருமாறு: -

### யாழ்ப்பாணம்

செல்வி.சிறிமதி வேலாயுதம் - ( 'அன்னை இல்லம்', தம்பசிட்டி, புலோலி தென்மேற்கு, பருத்தித்துறை), கந்தசாமி சதீஸ்கரன் - (எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ்), செல்வி நிஷாந்தினி சற்குணசிங்கம் - (மயிலணி, சுன்னாகம்), செல்வி.பரிமளா கேட்சனம் - (வேம்படி, துன்னாலை தெற்கு, கரவெட்டி), செல்வி.பத்மாஷினி வைரமுத்து - (கிளனை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை), செல்வி.ரஜினி இரத்தினராஜா - (இல.330, நாவலர் வீதி, ஆனைப்பந்தி), செல்வி.சங்கீதா சரவணபவானந்தன் - (அராலி தெற்கு, வட்டுக்கோட்டை), செல்வி.தேன்மொழி பேரின்பநாதன் - (இல. 103, வைத்தியசாலை வீதி, கொட்டடி), செல்வி.தாரணி கனகசிவநாயகம் - (தண்ணீர்தாழ்வு, கட்டுவன், தெல்லிப்பழை), திருநாவுக்கரசு மதிபரன் - (மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி), அம்பலவாணர் முரளிதரன் - (தேவாலய வீதி, கூழாவடி, ஆனைக்கோட்டை), ஜெயரத்தினம் நிஷாகர் - (பழைய தபால் நிலைய அருகாமை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்), கனகசபாபதி சிவானந்தவர்மன் - (இல.07, மயிலணி வீதி, சுன்னாகம்), சிதம்பரநாதன் சிவானந்தன் - (பிரான்பற்று, பண்டத்தரிப்பு), பரஞ்சோதிநாதன் வாமதேவன் - (பங்களா ஒழுங்கை, மல்லாகம்), செல்வி.சுபாசினி செல்லத்துரை - (மே.பா. திரு.எஸ்.சொலமன், துவாளி வீதி மேற்கு, உடுப்பிட்டி), செல்வி.தர்சினி சண்முகலிங்கம் - (கந்தசாமி கோவிலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்), செல்வி.மேகலா சந்தராஜா - (இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரி), செல்வி.டெனிசியா சுவாமிநாதன் - ('ஞான நிவாஸ்', கேணியடி, கரவெட்டி), செல்வி.தர்சினி திருநாவுக்கரசு - (இல.58, பூதவராஜர் வீதி, திருநெல்வேலி-10), செல்வி.மச்சக்காந்தி இராஜேந்திரம் - (இல.28, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்), செல்வி. லிசாந்தி சிவகுருநாதன் - ('சிவ வாசா', 3ஆவது மேல் கல், ஆறுமுகம் லேன், நல்லூர்), செல்வி.ஜெனிஸ்டலா செல்லத்துரை - (மல்வம், உடுவில், சுன்னாகம்), தங்கரத்தினம் ஜெயக்குமார் - (கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு), நடராஜா ஜெயராஜ் - (உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்), செல்வி. சிஷாந்தி குணராசா - (பிரதான வீதி, சங்கானை), செல்வி.மரீனா நீக்கலஸ் - (பற்றிமா வீதி, பண்டத்தரிப்பு), செல்வி.விஹிர்தா யோகராஜா - (சந்தாத்தோட்டம், ஆவரங்கால் மேற்கு, புத்தூர்), செல்வி.சிவமதி சிவயோகநாதன் - (மிருசுவில் வடக்கு, மிருசுவில்), செல்வி.சுரேந்தினி தனபாலசிங்கம் - (அம்மன் வீதி, மீசாலை வடக்கு) செல்வி. வசந்தகுமாரி [illegible] - ([illegible] வீதி, கோண்டாவில் [illegible]), செல்வி.காமினி சின்னராஜா - (வீ.எச்.லேன், கோப்பாய் தெற்கு, கோப்பாய், இருபாலை), செல்வி.சுமைலியா பாலசிங்கம் - (ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்), செல்வி.சுதா புவனேந்திரன் - (வரத்துப்பளை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை), செல்வி.றஜிதா தர்மகுலசிங்கம் - (நாவற்காடு, வரணி), செல்வி.அகிலா கந்தசாமி - (மணற்பதி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி), செல்வி.றஜிதா தங்கவேல் - (பூதராயர் லேன், பருத்தித்துறை), செல்வி. றமா சிவக்கொழுந்து - (கேணியடி, கரணவாய் மேற்கு, கரவெட்டி), மாணிக்கம் முருகதாசன் - (4ஆம் வட்டாரம், புங்குடுதீவு), செல்லத்துரை ஜனந்தன் (ஐயண்ணா வீதி, அம்பானை, சுன்னாகம்), அனந்தகுமார் மோகனகாந் - (யோக வாசா, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்), செல்வி.சிந்துஜா நேசராஜா - (இல.50, புதிய சிவன் வீதி, நல்லூர்), செல்வி. ஜிவிதா ஜீவரத்தினம் - எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ்), செல்வி.யசோதா நடராஜா - (அம்மன் வீதி, வேம்படி, காரைநகர்), செல்வி.சுமதா வேலாயுதம் - (குடமியன் வரணி, கொடிகாமம்) செல்வி.பங்கயற்செல்வி சிவலிங்கம் - (டீ.ரசன் வீதி, மல்லாகம்), செல்வி. சங்கீதா நடராஜா - (எகட் அண்ணா இண்டஸ்ட்ரி, வன்னியசிங்கம் வீதி, இணுவில் தெற்கு, இணுவில்), செல்வி.சுபத்திரா செல்லப்பா - (உடுவில் வீதி, மானிப்பாய்), செல்வி.றெஜிடாணியாலா அருமைநாயகம் - (மல்வம், உடுவில், சுன்னாகம்), செல்வி.கஜிலின் கதிரொளி - (தங்கராஜா, மல்வம், உடுவில், சுன்னாகம்), செல்வி.நிஷாந்தினி லக்ஷ்மணன் - (கல்லூரி வீதி, இளவாலை), தியாகராஜா செந்தூரன் - (காஞ்சிபுரம், மாதகல்), தெய்வேந்திரன் சுகந்தன் - (முருகமூர்த்தி வீதி, நெல்லியடி, கரவெட்டி), செல்வி.கார்த்திகா யோகநாதன் - (சோளங்கன், கரணவாய் மேற்கு, கரவெட்டி), உபேந்திரன் துஷ்யந்தன் - (ஓடக்கரை வீதி, சங்கானை), செல்வி.வாசுகி செல்வராஜா - (துன்னாலை மேற்கு, கலிகைச் சந்தி, கரவெட்டி), செல்வி.வனஜா தர்மகுலசிங்கம் - (சரஸ்வதி இல்லம், புலோலி தெற்கு, புலோலி), செல்வி. கோமதி தியாகராஜா - (முதலைக்குழி, கரணவாய் தெற்கு, கரவெட்டி), செல்வி.யசோதா குகதாசன் - (நிருவிலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை), செல்வி.விஜிதா கிருஸ்ணகுமார் - ([illegible] வீதி, சங்கானை), செல்வி.யுப[illegible] - (முடக்காடு ஒழுங்கை, நெல்லியடி கிழக்கு, கரவெட்டி), செல்வி.வனஜா ராஜரட்ணம் (வேலணை மேற்கு, வேலணை 06), செல்வி.ரமியா செல்வராசா - (இணுவில் மேற்கு, இணுவில்), செல்வி.ஜெனித்தா குமாரவேலு - (புத்தூர் கிழக்கு, புத்தூர்), செல்வி.வாசுகி தம்பிஐயா - (முதலி கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்), செல்வி.தயாளினி கந்தையா (சண்டிலிப்பாய் கிழக்கு சண்டிலிப்பாய்), செல்வி.சர்மினி மார்க்கண்டு (இல.141, இராசாவின் தோட்டம் வீதி), செல்வி.கிருஸ்ணரூபினி முத்துக்குமாரு - (மின்திரை, குப்பிளான் தெற்கு, ஏழாலை), கந்தசாமி பிரபாகரன் - (மூத்த விநாயகர் வீதி, புளியங்கண்டு வீதி, ஆனைக்கோட்டை), சண்முகலிங்கம் முகுந்தன் ('சுகந்தம்', இணுவில் கிழக்கு, இணுவில்), செல்வி. இந்திராணி துரைசிங்கம் - (பழைய முருகண்டி, புத்துவெட்டுவான், மாங்குளம்), செல்வி.அமுதினி திருநாவுக்கரசு - (இல.90, சிறி குகவாசா' கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்), செல்வி.சண்முகப்பிரியா நவரட்ணதாஸ் - (31/6, கண்ணகிபுரம் உவர்மலை, திருகோணமலை), செல்வி. நளாயினி யோகநாதன் - (மீசாலை கிழக்கு மீசாலை), செல்வி.தர்மிலா ராஜரட்ணம் - (சிங்கம் ஒழுங்கை, உடுவில்,சுன்னாகம்), செல்வி.ஜெயந்தி சிவஞானம் - (பத்தமேனி, அச்சுவேலி) செல்வி.ஜெயகவிதா மகாலிங்கம் - மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை), செல்வி.சசியாலா நாகராசா - (சங்குவேலி தெற்கு, மானிப்பாய்), செல்வி.ஜெயவதனி பாலசுப்பிரமணியம் - (பிராமண வீதி, தும்பளை, பருத்தித்துறை), செல்வி.ஜெயசின் செபஸ்ரியாம்பிள்ளை - (இல.100, பெத்தேள் உடுவில்), செல்வி.விஜயகலா சத்தியமூர்த்தி - (மயிலங்கூடல் இளவாலை), செல்வி. ஜெயந்தி சண்முகராஜா - (பெரிய மாவடி வீதி, சங்கத்தானை சாவகச்சேரி), செல்வி தவவனிதை தேவதாசன் - (கற்கோவளம், பருத்தித்துறை), செல்வி.சுஜிதா சிவனடியான் - (கலைமகள் ஒழுங்கை, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி), செல்வி.கேசினி மணிராசா - (உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாய்), செல்வி.தர்சினி மோகன் - (இல.193, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி), செல்வி. வேணுகா நவரத்தினலிங்கம் - (கமல வாசா, புதுவளவு சுன்னாகம்), செல்வி.ஜசிந்தினி சுப்பிரமணியம் - (வீரகத்திப் பிள்ளையார் கோயில், இமையாணன் உடுப்பிட்டி), செல்வி.பிரதீபா தம்பித்துரை - (சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்)

*(மிகுதி நாளை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# தொடரும் மனித உரிமை மீறல்களும் மக்களின் அவல வாழ்வு நிலையும்

இலங்கைத் தீவின் மனித உரிமை மீறல் நிலைமைகள் குறித்துக் கடும் விசனமும், அதிருப்தியும், ஆட்சேபமும் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை சர்வதேச மன்னிப்புச்சபை மீண்டும் வெளியிட்டிருக்கின்றது.

இந்த நிலைமைக்கு இலங்கை அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள், ஏனைய ஆயுதக்குழுக்கள் என எல்லாத் தரப்புகள் மீதும் சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளபோதிலும் ஒரு சட்ட ரீதியான அரசு என்ற முறையில் இலங்கை அரசுத் தரப்பின் மீது அதிகம் காய்ந்திருக்கின்றது அது.

அறுபது லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் அல்லல்படு வதைச் சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய பொறுப்புடைய அரசு, அதைச் செய்யத்தவறியமையால் தான் இத்தகைய அல்லோலகல்லோல நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

"ஒவ்வொரு பிரதான தாக்குதல் சம்பவங்களுக்குப் பின்னரும் மக்கள் தங்கள் வீடு, வாசல்கள், கிராமங்களை விட்டுத்தஞ்சம் தேடி - சரணாலயங்களை நாடி - ஓடும் அவலம் நேருகின்றது" - என்ற மோச நிலைமையை மன்னிப்புச் சபையின் பிந்திய அறிக்கை அப்பட்டமாக எடுத்துக்காட்டுகின்றது.

ஐ.நா. அமைப்புகளின் தரவு சேகரிப்புகளின்படி கடந்த ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து நாற்பதாயிரம் பேருக்கு மேல் பொதுமக்கள் வீடு, வாசல்களைவிட்டு இடம்பெயர்ந்து அகதிகளாகத் தஞ்சம் புகுந்து வாழும் அவலம் நேர்ந்திருக்கின்றது.

இவ்வாறு பொதுமக்களைப் பீதியில் உறைய வைத்து அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற உணர்வை ஏற்படுத்துகின்ற தாக்குதல்களுக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படுவதில்லை. அவர்களுக்கு எதிராக சட்ட, ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. அரசின் இந்தப் பொறுப்பற்ற போக்கே மக்கள் இவ்வாறு அல்லல்படும் நிலைமை மோசமடைய அடிப்படைக் காரணம் என்பதும் மன்னிப்புச் சபை அறிக்கையின் ஊடாக அம்பலப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதல்களை அடுத்து பேசாலையில் தேவாலயம் ஒன்றுக்குள் தஞ்சம் புகுந்திருந்த ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் ஒரு பெண்மணி உயிரிழந்தார். மேலும் 44 பேர் படுகாயமடைந்தனர். தேவாலயம் மீதான இந்தத் தாக்குதலுக்கு இலங்கை அரசுப் படைகளைச் சேர்ந்தோரே காரணம் என்பதற்கு கண்கண்ட - உறுதியான - சாட்சியங்கள் பல உள்ளன - என்று மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இப்படி வலுவான - உறுதியான - தெளிவான - சாட்சியங்கள் இருந்தும் இக்கொடூரத்துக்கு காரணமானவர்கள் மீது எந்தவித சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ். குடாநாட்டில் மட்டும் கடந்த டிசம்பர் மாதம் முதல் காணாமல் போனோர் எண்ணிக்கை நூற்றி அறுபதைத் தாண்டிவிட்டது என்று மற்றொரு புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

யுத்த பூமியில் - தமிழர் தாயகத்தில் - இத்தகைய நிலைமை என்றால் தென்னிலங்கையிலும் தமிழர்களுக்கு அதுதான் கதி என்றாகிவிட்டது.

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடக் கல்வியைத் தொடர்வதற்காக அப்பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வாடகைக்குக் குடியிருந்ததைத் தவிர, வேறு எந்தத் தவறும் செய்யாத ஒன்பது தமிழ் மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலுக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

தொலைபேசி மூலம் அப்பகுதி சிங்களவர்கள் கொடுத்த முறைப்பாட்டின்படி இக்கைதுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமைதான் இப்போது தென்னிலங்கை எங்கும்.

'புலிகளை அடக்குகின்றோம்' என்ற பெயரில் நடக்கும் மனித உரிமை மீறல்களை - ஒடுக்குமுறை நடவடிக்கைகளை - தமிழர்களுக்கு எதிரான எதேச்சதிகார நெருக்குவாரங்களை - கைவிட தென்னிலங்கை அரசுத் தலைமை இதயசுத்தியுடன் தயாராகாத வரை இத்தகைய அவல நிலை தொடர்வது தவிர்க்கமுடியாததாக இருக்கும்.

# ஆக்கிரமிப்பு படையினருக்கு எதிராக பாரிய அளவில் தாக்குதல் தொடரும்

## யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை எச்சரிக்கிறது

கொழும்பு,ஜூன்30

யாழ்.மண்ணை ஆக்கிரமித்துள்ள படையினருக்கு எதிராக பாரிய அளவிலான தாக்குதல்களை தொடரவிருப்பதாக யாழ்.மாவட்ட பொங்கி எழும் மக்கள் படை எச்சரித்துள்ளது.

இதுவிடயமாக பொங்கி எழும் மக்கள்படை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் -

யாழ்.குடாநாட்டில் தமிழ்மக்கள் மீதான கொடூரங்களும் அவர்கள் வகைதொகையின்றி, வயது வேறுபாடின்றிக் கைதுசெய்யப்படும் கொலைக் கலாசாரமும் மேலோங்கிக் காணப்படுகின்றன. இதனைக் கண்டித்து யாழ். மாவட்ட மக்கள் அமைப்புகள் பணிப்புறக்கணிப்பிற்கு அழைப்பு விடுத்திருந்தன. அந்த அழைப்பை ஏற்று குடாநாட்டில் அனைத்து அரச செயலகங்களின் பணியாளர்களும் பணிகளுக்குச் செல்லாமல் ஒருமித்து ஸ்ரீலங்கா அரச நிர்வாகத்திற்கு தமது உள்ளக் கிடக்கைகளை வெளிக்காட்டி நின்றனர்.

அவ்வேளையில் கூட ஸ்ரீலங்காப் படையினரால் பணிக்குச் செல்லுமாறு ஆயுதமுனையில் அச்சுறுத்தியபோதும் எமது மக்களின் ஏகோபித்த முடிவுகளால் ஸ்ரீலங்காப் படைகளின் அச்சுறுத்தல் பலிக்கவில்லை. இருந்தபோதும் பரீட்சைக்காலம் என்பதால் மாணவர்களின் நலன் கருதி பணிப்புறக்கணிப்பு தளர்த்தப்பட்டது.

தொடர்ந்தும் அப்பாவி பொதுமக்கள் மீதான அரச பயங்கரவாத வன்முறைகள் தொடர்ந்தவண்ணம் இருப்பதனால் மீண்டும் மக்கள் அமைப்புகளினால் கடந்த 26.06.2006 அன்று பணிப்புறக்கணிப்பிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதற்கமைய தற்போது பணிப்புறக்கணிப்பு நடைமுறையில் உள்ளது.

இதனைக் குழப்பும் வகையில் ஆயுதமுனையில் அச்சுறுத்தி அரச அலுவலர்களை பணிக்குச் செல்லுமாறு மிரட்டும் படையினர், எமது மக்கள் மீதான கொலைவெறியாட்டத்தை நிறுத்தி, மக்களின் இயல்பு வாழ்க்கையில் குந்தகம் விளைவிக்காமல் முகாம்களுக்குள் முடங்குவார்களானால் எமது மக்கள் எதிர்பார்க்கின்ற இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தகூடிய ஏதுவான சூழல் உருவாகும்

எமது நிலங்களை ஆக்கிரமித்து நிற்பதோடுமட்டுமல்லாமல் மக்களையும் அடிபணியவைத்து அடக்கி ஆள நினைப்பது அவர்களின் கொலை வெறி என்பதையும் மிக விரைவில் ஒவ்வொரு மக்களும் ஸ்ரீலங்கா தேசத்திற்கு மட்டுமன்றி சர்வதேசத்திற்கும் உணரவைப்பார்கள்.

எனவே, தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பிற்கு எதிராக படையினரின் மிரட்டல்கள் அமையுமாயின் பாரிய எதிர்விளைவுகளை சிங்களப் படைகள் சந்திப்பது தவிர்க்கமுடியாதது ஆகும். மக்கள் அமைப்புகளால் விடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பிற்கு எமது ஆதரவும் இருக்கும் என்பதையும் -

எந்த அச்சுறுத்தல்களுக்கும் அடிபணிந்து போகாமல் பணிப்புறக் கணிப்பிற்கு தங்களின் பூரண ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறும் -

யாழ்.மாவட்ட பொங்கி எழும் மக்கள் படை ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசுக்கும் அதன் படைகளுக்கும் எதிரானதே விடுதலைப் புலிகளின் விடுதலைப் போராட்டம்

## மட்டு. அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜூன்30

ஸ்ரீ லங்கா அரசாங்கம் மற்றும் ஸ்ரீ லங்கா அரச படைகளுக்கு எதிராகத் தான் நாம் போராடுகிறோமே தவிர, அப்பாவிப் பொதுமக்களுக்கும் பாடசாலைக் குழந்தைகளுக்கும் எதிராக அல்ல என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு அவர் அளித்த நேர் காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த நேர் காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் போர்ச் சூழலை உருவாக்குவதற்காக சில தீவிரவாத சக்திகள் முயற்சிக்கின்றன. எமது இலக்குகள் பாடசாலைகள் அல்ல. பொய் வதந்திகளைப் பரப்பிவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் இருப்பதான தோற்றத்தை உருவாக்க எண்ணுகின்றனர்.

எந்த ஒரு நிலையிலும் பாடசாலைகளையோ பொதுமக்கள் குடியிருப்புகளை நாம் இலக்கு வைக்கமாட்டோம் என்பதை உறுதியாகக் கூறுவோம். எமது விடுதலைப் போராட்டமானது அரசாங்கத்திற்கும் அரச படைகளுக்கும் எதிரானதே தவிர, அப்பாவிப் பொது மக்களுக்கு அல்ல.

சர்வதேச சமூகத்திடம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அவப் பெயரை ஏற்படுத்துவதற்காக சில சக்திகள் கடந்த புதன்கிழமையன்று கொழும்பில் வெடிகுண்டுப் புரளியைக் கிளப்பிவிட்டுள்ளனர். கெப்பிட்டிக்கொல்லாவ சம்பவத்திற்கும் எமக்கும் எதுவித தொடர்புமே இல்லை -என்றார் தயாமோகன். (205)

# திருகோணமலை அப்பாவி மாணவர் படுகொலை: சாட்சிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வலியுறுத்து

திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கின் சாட்சிகளுக்கான பாதுகாப்பை ஸ்ரீலங்கா அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இது விடயமாக அந்த அமைப்பின் ஆசிய இயக்குநர் பிராட் ஆதம்ஸ் கூறியுள்ளதாவது:

திருகோணமலையைச் சேர்ந்த அப்பாவி மாணவர்கள் ஐந்துபேர் கடந்த ஜனவரி மாதம் இரண்டாம் திகதி திருகோணமலை கடற்கரையில் வைத்து கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தப் படுகொலைச் சம்பவங்களில் தொடர்புடைய குற்றவாளிகளை நீதியின் முன்னால் நிறுத்துவதன் மூலமே இச்சம்பவங்களைத் தடுக்கவேண்டும்.

இந்தச் சம்பவங்களில் குற்றவாளிகளை அடையாளம் காட்டிய சாட்சியங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்களின் படுகொலை வழக்கில் சாட்சியங்களுக்கு அரச படையினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். கடந்த சில மாதங்களாக அவர்களுக்கு இத்தகைய அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீலங்கா அரச படைகளைக் கட்டுப்படுத்த ஸ்ரீ லங்கா அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார் அவர். (203)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றச் சென்ற 'லான்மாஸ்ரர்' நெடுங்குளத்தில் தீக்கிரை

அரியாலை,ஜூன்30

கொழும்புத்துறை நெடுங்குளம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றச் சென்ற 'லான்மாஸ்ரர்' ஒன்று கடந்த செவ்வாயன்று அப்பகுதி மக்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

'லான்மாஸ்ர'ரில் மணல் ஏற்றச் சென்றவர்கள் ஓடித்தப்பிவிட்டனர்.

சட்டவிரோதமாக இப்பகுதியில் மணல் ஏற்றச் செல்பவர்களுக்கும் கொழும்புத்துறைப் பகுதி இளைஞர்களுக்கும் இடையே அண்மைக் காலமாக கைகலப்பு மற்றும் அடிதடிச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை தெரிந்ததே.

நெடுங்குளத்தை அண்டிய பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழப்படுவதால் இப்பிரதேசம் தாழ்ந்து காணப்படுவதாகவும் -

மாரிகாலத்தில் குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுந்து செல்லும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். (17)

# மோட்டார் வாகன திணைக்களத்திலும் குண்டுப் புரளியால் பெரும் பரபரப்பு

கொழும்பு, ஜூன்30

நாரஹேன்பிட்டிய மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலை அடுத்து அங்கு நேற்றுமுன்தினம் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைத்துள்ளது. உடனடியாக பொதுமக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டு தேடுதல்கள் நடத்தப்பட்டன. ஆயினும் சந்தேகத்திற்கிடமான பொருள்கள் எதுவும் கிடைக்கவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்திற்கு அருகில் கையடக்கத் தொலைபேசி ஒன்றின் மூலம் படம்பிடித்த இளைஞர் ஒருவர் பொலீஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

(ஐ-12)

## நாளை

ஆனி - 17
சனிக்கிழமை
01.07.2006
திதி : சஷ்டி
பின்னிரவு : 05.37
நட்சத்திரம் : பூரம்
பின்னிரவு : 03.15
சுபநேரம் : 02.56 - 04.26
ராகுகாலம் : 08.56 - 10.26

## உதயவாக்கு

உங்கள் பிள்ளைகளுக்கு நற்பண்புகளைப் புகட்டுங்கள் அவைகள்தான் அவைகளே மகிழ்ச்சியுடன் வைத்திருக்கும். பொன் பொருள்களல்ல.

*- லூட்விக் வாக் பீதோவன்*

# கட்டுப்பாடின்றி ம.எண்ணெய் விநியோகம்

அரியாலை,ஜூன்30

யாழ்.குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் மண்எண்ணெய் எதுவித கட்டுப்பாடின்றி போதிய அளவில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

அத்துடன், யாழ். நகரை அண்டிய கரையோரப்பிரதேச மக்களுக்கு மாட்டு வண்டில்கள் மூலம் மண்எண்ணெய் தாராளமாக விநியோகிக்கப்படுகிறது.

இதேசமயம், -இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு பவுசர் மூலம் கொண்டு வரப்படும் மண்எண்ணெய், அங்கிருந்து தனியார் பவுசர் மூலம் குடாநாட்டு எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு தாராளமாக விநியோகிக்கப்படுவதாகக் கூறப்பட்டது. (17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்

# தொண்டைமானாறு

# ஆனி உத்தர திருவிழாச் சிறப்புமலர்





நிகழும் விய வருடம் ஆனி 18ஆம் நாள்
ஞாயிற்றுக்கிழமை (02.07.2006) காலை 8மணியளவில்
சகஷ்ர **மகா(1008) சங்காபிஷேகம்** நடைபெற்று
சண்முக அர்ச்சனையுடன் 10.30 மணியளவில்
முருகப்பெருமான் வீதிவலம் வந்தருளுவார்.

மதியம் ஆலயத்தில் அன்னதானம்
வழங்கப்படும்.

தென்மராட்சி புகழ் பாபு குழுவினரின்
மேளக் கச்சேரியும் நடைபெறும்.



ஆலய பிரதம குரு:
ஆறுமுகசாமி ஐயர் சிவசண்முகம் ஐயர் *(J.P.)*
உரிமையாளர்,
செல்வச்சந்நிதி தொண்டைமானாறு.

உபயகாரர்:
பொ.சிவஞானம் குடும்பம்,
அ.மனோராஜ் குடும்பம்,
சி.ஜெகதீசன் குடும்பம்,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(சி/49877)(24-19-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP GERMANY 2006 18 ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி

# உலகக் கிண்ணம் எந்த நாட்டுக்கு?



உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரில் முதல் இரண்டு சுற்றுகள் முடிவடைந்த நிலையில், இன்று தொடங்கும் காலிறுதி ஆட்டத்திற்கு எட்டு அணிகள் தகுதி பெற்றுள்ளன.

இவற்றிலிருந்து, நான்கு அணிகள் அரையிறுதியாட்டத்திற்கும், இரு அணிகள் இறுதியாட்டத்திற்கும் முன்னேறும்.

முதல் இரண்டு சுற்றுகளை முடித்து காலிறுதிக்கு முன்னேறியுள்ள அணிகள் அனைத்தும் ஓரளவுக்கு திறமையான அணிகளே. உக்ரைன் மற்றும் இங்கிலாந்து ஆகிய இரு அணிகள், காலிறுதியாட்டத்தில் நுழைந்திருப்பதை அந்த அணிகளாலேயே நம்ப முடியவில்லை.

இரண்டு சுற்று முடிந்த நிலையிலும் கூட, இங்கிலாந்து அணி, ஒரு பெரிய வலுவான அணியை எதிர் கொண்டு வெற்றி பெறுமா என்று இன்னும் உறுதியாகக் கூறமுடியாத நிலைதான் உள்ளது.

காலிறுதிப் போட்டியில் போர்த்துக்கல் அணியை இங்கிலாந்து வென்று அரையிறுதியில் நுழைந்தால் அங்கு அந்த அணி, பிறேசில் அல்லது பிரான்ஸ் அணியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

அரையிறுதியில் பிறேசிலை சந்திக்கத்தான் இங்கிலாந்துக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. அப்படியானால் இறுதியாட்டத்திற்கு நுழைவது என்பது இங்கிலாந்து அணிக்கு மிகக் கடினம். ஒருவேளை இங்கிலாந்தை வீழ்த்தி போர்த்துக்கல் அரையிறுதிக்கு தகுதி பெறும் பட்சத்தில் அந்த அணியும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுமா என்பதும் கடினம்தான்.

காலிறுதி சுற்றில், பிரான்ஸை பிறேசில் வெல்லும் பட்சத்தில், அரையிறுதியில் இங்கிலாந்து அல்லது போர்த்துக்கலை அந்த அணி சந்திக்கும். அப்படி சந்திக்கும் பட்சத்தில் இரண்டு அணிகளில் எது வந்தாலும் வீழ்த்துவது பிறேசிலுக்கு தற்போது பெரிய காரியமல்ல. ஒரு வேளை எதிர்பாராத விதமாக பிரான்ஸ் வெற்றி பெறும் பட்சத்தில் அந்த அணி இங்கிலாந்து அல்லது போர்த்துக்கலை சமாளிக்க வேண்டியிருக்கும். அது வேறு கதை.

இறுதியாட்டத்திற்குத் தகுதி பெறும் அணியாக இந்த நான்கு அணிகளிலிருந்து(இங்கிலாந்து, போர்த்துக்கல், பிறேசில் மற்றும் பிரான்ஸ்) அதிக வாய்ப்பு பிறேசிலுக்குதான் இருக்கிறது.

எதிர்புறத்தில் ஜேர்மனி, ஆர்ஜென்ரீனா, இத்தாலி மற்றும் உக்ரைன் ஆகிய அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

ஆர்ஜென்ரீனா மற்றும் ஜேர்மனி மோதும் போட்டியில் இருவரில் ஒருவருக்குத்தான் வாய்ப்பு என்பது ஏற்கனவே ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்திவிட்டது. இந்தக் காலிறுதியாட்டத்தில் வெற்றி பெறும் அணி இறுதியாட்டம் வரை எளிதாக முன்னேறிச் சென்றுவிடும் என்பது ரசிகர்களுக்குத் தெரிந்ததுதான்.

ஜேர்மனி அல்லது ஆர்ஜென்ரீனா ஆகிய இரு அணிகளில், எந்த அணி வெற்றி பெறும் என்பதுதான் இந்த உலகக் கிண்ணத்தொடரில் விடை காண முடியாத ஒரு கேள்வி. எனவே, இரு அணிகளில் எந்த அணி, அரையிறுதிக்கு முன்னேறும் என்பதை கணிக்க முடியாது. ஆனால், இத்தாலி, உக்ரைன் மோதும் ஆட்டத்தில் இத்தாலிக்கு கொஞ்சம் வாய்ப்பு அதிகமாகவே இருக்கிறது.

இந்த கால்பந்து தொடரில் தான் அறிமுகமான உக்ரைன் அணி, காலிறுதியை தாண்டுமா என்பது பெரிய கேள்விக் குறியே.

அரையிறுதியாட்டத்தில் இத்தாலி, ஆர்ஜென்ரீனா அணியை அல்லது ஜேர்மனி அணியையே சந்திக்கும். ஆகவே, இவ்விரு அணிகளையும் தாண்டி இறுதியாட்டத்திற்கு இத்தாலி நுழைவது என்பது மிகக் கடினமான காரியம்.

இப்போதுள்ள நிலையில் இறுதியாட்டத்தில் பிறேசில்- ஜேர்மனி அல்லது பிறேசில்-ஆர்ஜென்ரீனா மோதும் என்று எதிர்பார்க்கலாம்.

## சாதனை நாயகன் றொனால்டோ

உலகக் கிண்ண ஆட்டங்களில் அதிக கோல் அடித்து, இதற்கு முன் நிகழ்த்தப் பட்ட சாதனைகளையெல்லாம் பிறேசில் வீரர் றொனால்டோ முறியடித்துவிட்டார்.

கடந்த 32 ஆண்டுகளுக்கு முன்பு, ஜேர்மனி வீரர் ஜெர்ட் முல்லர் 14 கோல் அடித்து நிகழ்த்திய சாதனையை அவரது சொந்த மண்ணிலேயே தகர்த்து எறிந்து விட்டார் றொனால்டோ.

கடந்த 2002 உலகக் கிண்ணத் தொடர் வரை, 12 கோல் அடித்து, பிறேசில் ஜாம்பவான் பீலேயின் சாதனையை சமன் செய்திருந்தார். கடந்த ஜூன் 22ஆம் திகதி நடந்த ஜப்பானுக்கு எதிரான ஆட்டத்தில், 2 கோல் அடித்து, பீலே மற்றும் பிரான்ஸ் ஜாம்பவான் போன்டைன் சாதனைகளை முறியடித்தார். 14 கோல்களுடன் முல்லர் சாதனையை சமன் செய்திருந்தார்.



கடந்த 27 ஆம் திகதி கானாவுக்கு எதிரான ஆட்டத்தில் ஒரு கோல் அடித்ததன் மூலம் அவரது கோல் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்தது. உலகக்கிண்ணத் தொடரில் அதிக கோல் அடித்தவர் என்ற பெருமையை அந்த வினாடியே பெற்றுவிட்டார் றொனால்டோ.

காலிறுதிக்கு பிறேசில் தகுதி பெற்றுள்ளது. அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டத்திற்கு இந்த அணி தகுதி பெறும் பட்சத்தில், அதிகபட்சமாக இன்னும் மூன்று ஆட்டங்களில்களில் விளையாடும் வாய்ப்பு றொனால்டோவுக்கு இருக்கிறது.

எதிர்வரும் போட்டிகளிலும் அவர் கோல் அடிக்கும் பட்சத்தில் அவர் சாதனையின் இலக்கு அதிகரித்துக் கொண்டே செல்லும். ஓிரண்டு உலகக் கிண்ண ஆட்டங்களில் விளையாடும் வீரரை பார்ப்பதே அரிதாக இருக்கும்போது, றொனால்டோவின் சாதனை வெகுவிரைவில் முறியடிக்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

**மீதமுள்ள சாதனைகள்**

உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் றொனால்டோ நிகழ்த்த வேண்டிய சாதனைகள் இன்னும் நிறைய இருக்கின்றன. 1994 முதல் நான்கு உலகக் கிண்ணத் தொடர்களில் பங்கேற்றுள்ள போதும், அவர் உலக கோப்பை தொடரில் 'ஹாட்ரிக்' கோல் அடித்தது இல்லை. இருமுறை 'ஹாட்ரிக்' அடித்ததுதான் இதுவரையான உலகக் கிண்ண சாதனை. அதையும் அவர் முறியடிக்க வேண்டும். 1958இல் பீலே ஒரு முறை 'ஹாட்ரிக்' அடித்துள்ளார்.

ஒரே உலகக் கிண்ணத்தில் அதிக கோல் அடித்தவர் பிரான்சை சேர்ந்த ஜஸ்டி போன்டைன். 1958இல் 13 கோல் அடித்துள்ளார். இச்சாதனை இதுவரை முறியடிக்கப்படவில்லை. தற்போதுள்ள றொனால்டோவின் உடல் நிலையை கருத்தில் கொள்ளும் போது, இவ்விரு சாதனைகளும் அவருக்கு எட்டக்கூடியவையாக இல்லை. என்றாலும், இது வரை அவர் புரிந்த சாதனையை, முறியடிக்கும் வாய்ப்பு கூட இன்னொரு வீரருக்கு எப்போது கிடைக்கும் என்பது தெரியவில்லை. வாழ்த்துக்கள் றொனால்டோ.!

## பிரகாசிக்கும் மாற்று வீரர்கள்

*ஜேர்மனியில் நடைபெற்றுவரும் உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் முதல் 48 ஆட்டங்களில் [முதல் சுற்று லீக் ஆட்டங்கள்] அடிக்கப்பட்ட 117 கோல்களில் 20 கோல்களை ஆட்டத்தின் இடையில் மாறும் வீரர்கள் அடித்துள்ளனர்.*

*ஜப்பானுக்கு எதிரான ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர்கள் டிம் கேஹில் [2], ஜான் அலியோசி [1] அடித்த கோல்களும் போலந்துக்கு எதிராக ஜேர்மனி வீரர் ஒலிவர் நியூவில்லே அடித்த கோலும் வெற்றியைத் தீர்மானிக்கும் கோல்களாக அமைந்தன.*

*ஆர்ஜென்ரீனாவின் லியோனல் மெஸ்ஸி, கார்லோஸ் டெவெஸ் ஆகியோர் சேர்பியாவுக்கு எதிராக அடித்த கோல்கள் கோல் எண்ணிக்கையை உயர்த்த உதவின.*

*1970இல் மெக்ஸிக்கோவின் மாற்று வீரர்கள் இக்னேசியோ பசாகுரோன், எல்சல்வடோருக்கு எதிராகக் கோல் அடித்து உலகக் கோப்பையில் கோல் அடித்த முதல் மாற்று வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இந்த ஆட்டத்தில் மெக்ஸிக்கோ 4-0 என வென்றது.*

*இறுதி ஆட்டத்தில் கூட வீரர்கள் 3 கோல் அடித்துள்ளனர். 1978இல் ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராக ஹொலண்டின் டிக் நானிங்கா அடித்த கோல் ஆட்டத்தைக் மேலதிக நேரத்துக்கு இட்டுச் சென்றது. இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா 3-1 என வென்றது.*

*1982இல் இறுதி ஆட்டத்தில் மேற்கு ஜேர்மனிக்கு எதிராக இத்தாலியின் அலெஸ்ஸாண்ட்ரோ அட்டோ பெல்லி கோல் அடிக்க இத்தாலி 3-1 என வென்றது.*

*1986இல் இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராக மேற்கு ஜேர்மனியின் ருடி வோல்லர் கோல் அடிக்க 2-2 என ஸ்கோர் சமன் ஆனது. இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா வென்றது.*

*1970இல் மேற்கு ஜேர்மனிக்கு எதிரான அரை இறுதியில் மேலதிக நேரத்தில் இத்தாலியின் ஜியானி ரிவேரா கோல் அடிக்க இத்தாலி 4-3 என வென்றது.*

*1982இல் அரை இறுதியில் பிரான்ஸுக்கு எதிராக ஜேர்மனி வீரர் கார்ல் ஹீன்ஸ் ருமெனிக்கி அடித்த கோல் அணி வெற்றிபெற வழி வகுத்தது.*

*1990இல் 2ஆவது சுற்று ஆட்டத்தில் பெல்ஜியத்துக்கு எதிராகக் மேலதிக நேரத்தின் கடைசி நிமிடத்தில் மாற்று வீரர் டேவிட் பிளாட் அடித்த கோலே இங்கிலாந்துக்கு வெற்றிக்கோலாக மாறியது.*

*இந்த உலகக் கோப்பைப் போட்டிக்கு முன் வரை இத்தாலியின் மாற்று வீரர்கள் 10 கோல் அடித்துள்ளனர்.*

*ஸ்பெயின், ஜேர்மனியின் மாற்று வீரர்கள் தலா 8 கோல் களும் சுவீடன் வீரர்கள் 7 கோல்களும் அடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

FIFA WORLD CUP GERMANY 2006

தொகுப்பு அதிரன்

## பிறேசிலின் சாதனைகள்...

காலிறுதியில் காலடி எடுத்து வைத்துள்ள பிறேசில் அணி உலகக் கிண்ணக் கால்பந்து வரலாற்றில் பல்வேறு சாதனைகளைக் கடந்துள்ளது. கடந்த 27 ஆம் திகதி டார்ட் மன்ட்டில் நடந்த இரண்டாம் சுற்று போட்டியில் பிறேசில் அணி கானாவை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இப்போட்டியில் பிறேசில் அணி கடந்த முக்கிய மைல் கற்கள்:-

கானாவை வீழ்த்திய பிறேசில், உலகக் கிண்ண ஆட்டங்களில் தொடர்ந்து தனது 11ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

1998இல் நடந்த இறுதியாட்டத்தில் பிரான்ஸிடம் பிறேசில் தோற்றது. அதற்கு பிறகு, பிறேசிலின் வெற்றி நடை தொடர்கிறது.

இப்போட்டியில் முதல் கோல் அடித்த நட்சத்திர வீரரான றொனால்டோ, உலகக் கிண்ண வரலாற்றில் அதிக கோல் (15) அடித்தவர் என்ற உலக சாதனையைப் படைத்தார்.

அதிக போட்டியில் விளையாடிய பிறேசில் வீரர் என்ற பெருமை பெற்றார் 36 வயதான அணித்தலைவர் கபு. 19ஆவது போட்டியில் பங்கேற்ற இவர், சக நாட்டு வீரர்களான துங்கா, கிளாடியோ டபாரலை(18 போட்டி) முந்தினார். இம்முறை பிறேசில் இறுதியாட்டத்திற்கு முன்னேறினால், நான்கு முறை உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் விளையாடிய முதல் வீரர் என்ற சாதனையை கபு படைக்கலாம்.

கிண்ணம் வென்றால் இரு முறை கிண்ணம் வென்ற ஒரே அணித்தலைவர் என்ற பெருமை பெறலாம். பிறேசிலுக்காக இது வரை 149ஆட்டங்களில் கபு விளையாடியுள்ளார். இதில் 19இல் மட்டும் தோல்வியை சந்தித்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் அதிக ஆட்டங்களுக்கு (19) பயிற்சியாளராக இருந்தவர்கள் வரிசையில் நான்காம் இடம் பெற்றார் பிறேசிலின் கார்லஸ் ஆல்பர்ட்டோ பெரைரா. குவைத்(1982), அமெரிக்கா(1990), சவூதி அரேபியா (1998), பிறேசில்(1994, 2006) என ஐந்து அணிக்கு பயிற்சியாளராக இருந்துள்ள இவர், இன்னும் 6 போட்டிகளுக்குப் பயிற்சியாளராக நீடித்தால் ஜேர்மனியின் ஹெல்மட் ஸ்கானின் சாதனையை எட்டலாம். ஸ்கான் 25 ஆட்டங்களுக்கு பயிற்சியாளராக இருந்துள்ளார்.

ஆட்ரியானோ கோல் அடித்த போது, பிறேசில் அணி உலகக் கிண்ணத் தொடரில் தனது 200ஆவது கோலைப் பதிவுசெய்தது. அடுத்து றொபர்ட்டோ கோல் அடித்த போது இந்த எண்ணிக்கை 201 ஆக உயர்ந்தது.

### இன்றைய ஆட்டங்கள்



**காலிறுதிப் போட்டி**

ஜேர்மனி - ஆர்ஜன்ரீனா
இடம் : பேர்லின்
நேரம் : இரவு 8.30

இங்கிலாந்து - போர்த்துக்கல்
இடம் : ஹம்போர்க்
நேரம் : நள்ளிரவு 12.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் உரிமையை பறிப்பதுதான் சிங்களவரைப் பாதுகாக்கும் வழிமுறையா?

## சம்பந்தன் எம்.பி. காட்டம்

தமழ் மக்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை அகதிகளாக்குவதுதான் சிங்களவர்களைப் பாதுகாக்கும் வழிமுறையா? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைத தெரிவித்திருக்கிறார்.

அந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைதி முயற்சிகளிலிருந்து விலகவில்லை. நோர்வே எழுப்பிய கேள்விகளுக்குத்தான் பதிலளித்துள்ளனர். ஆகையால் அதில் எதுவித சநதேகமும் இல்லை.

கெப்பிட்டிக்கொல்லாவ சம்பவத்தைப் போல்தான் ஊர்காவற்றுறை, பேசாலை மற்றும் திருமலையில் மாணவர்கள் கொல்லப்பட்டதையும் கருதவேண்டும்.

அமைதி முயற்சிகளுக்குச் சாதகமாக பொதுமக்கள் மீதான தாக்குதல்களை அரசு நிறுத்தினால் அதேவகையில் தமிழீழ விடுதலைப் புலிகளும் செயற்படுவார்கள்.

பேசாலையில் தேவாலயத்தின் மீது கைக்குண்டை படையினர் வீசியுள்ளனர். கடற்கரையில் சிலரை சுட்டுக்கொன்று 50 கண்ணாடியிழைப் படகுகளை எரித்துள்ளனர். இந்தக கொடூரத்தை எப்படி நியாயப்படுத்துவீர்கள்?

கடந்த இரு மாதஙகளில் வடக்கு - கிழக்கு நிலைமை மிகவும் மோசமடைந்து வருகிறது. இந்தப் பகுதிகளிலிருந்து பெருந்தொகையான மக்கள் தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். தங்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதை அடுத்து அவர்கள் தமது வீடுகளை கைவிட்டுவிட்டு அகதிகளாகச சென்றுவிட்டனர்.

இந்தப் பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல முடிவதில்லை. பொது மக்கள் தொழிற் செயற்பாடுகள் மேற்கொள்ள முடிவதில்லை. ஆழிப்பேரலை மீளமைப் புக்கான பொதுக் கட்டமைப்பை அனுமதித் திருந்தீர்கள் எனில் மீள் புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப் பட்டிருக்கும்.

ஆழிப்பேரலைப் மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பைத் தடுத்த சக்திகள் தான் இப்போதைய நிலைகளுக்கு அனைத்துப் பொறுப்பும். இந்த சக்திகள் அரசாங்கத்தில் இருப்பது கவலையளிக்கிறது.

அமைதி முயற்சிகளுக்கு ஜே.வி.பியும ஜாதிக ஹெல உறுமயவும் தடையாக இருக்கின்றன தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்துவிட்டு சிங்களவரைப் பாதுகாக்க வேண்டும் என்று கருதுகிறீர்களா?

தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு அவர்களை தங்களது வீடுகளிலிருந்து முகாம்களுக்கு இடம்பெயர வைப்பதுதான சிங்களவர்களைப் பாதுகாக்கின்ற வழிமுறையா? இதைத்தான் புத்த மதம் கற்பிக்கிறதா? இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்தியா ஒரு முக்கிய காரணி என்பதில் கேள்வியே தேவையில்லை. இந்தியாவின் பங்களிப்பு அவசியமானது என்பது உண்மை - என்றார் இரா.சம்பந்தன்.

## முருங்கன் நீதிமன்றத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டு!

மன்னார் முருங்கன் நீதிமன்றம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி சுமார் 15 நிமிடங்களில் வளாகத்தின் பின்னால் உள்ள தபாலகக்கட்டட புதர்ப்பகுதியிலிருந்து நீதிமன்றம் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

இத்துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக அப்பகுதி மக்களும் நீதிமன்ற வளாகத்திலிருந்தவர்களும் பெரும் பீதியடைந்தனர்.

இச்சம்பவத்தில் மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா உட்பட சட்டத்தரணிகள், அதிகாரிகள் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர். சூட்டுச்சம்பவத்தின்போது நீதிபதி உட்பட ஏனைய சட்டத்தரணிகளும் மேசை யின் கீழ் பதுங்கியிருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் பொலீஸார் நீதிபதியையும் சட்டத்தரணிகளையும் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். துப்பாக்கிச்சூட்டு அசம்பாவிதத்தை அடுத்து சம்பவதினம் நடைபெறவிருந்த வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 12ஆம் திகதிக்கு நீதிவான் அப்துல்லா ஒத்திவைத்தார். (க)


## முக்கிய அறிவித்தல்

**வலி-கிழக்கு வட பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்**
**அச்சுவேலி (வ-து)**

**கிளைக்குழுத் தெரிவுகள்**

**சகல வாக்காளர்கட்கும்,**

மேற்படி எமது வலி.கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கு 01-07-2006 இல் நடைபெறவிருந்த கிளைக்குழுத் தெரிவுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் அன்றைய தினம் நடைபெறமாட்டாது. இது பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**பொ.சிவலிங்கம்,**
*கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,*
*யாழ்.மாவட்டம்.*

(சி/49872)(26.19.14)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு** 15 - 02 - 1926



**உதிர்வு** 22 - 06 - 2004

**அமரர் ஞானமூர்த்தி ஐயாத்தம்பி**

*திதி: பஞ்சமி 30.06.2006*

எங்கள் அன்புத் தெய்வமே!
எங்களைப் பிரிந்து ஆண்டுகள் இரண்டானாலும்
ஆறாது எங்கள் துயரம்! அணையாது உங்கள் நினைவு!
*ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:*

மீசாலை வடக்கு,
இராமாவில் கொடிகாமம்.

**மகள் - யோகேஸ்வரி**
**மருமகன், பேரப்பிள்ளைகள்.**

(51693)(21.26.19.14)

## மரண அறிவித்தல்



**செல்லத்துரை செல்வநாயகம்**

(சட்டத்தரணி, ஜே.பி.யூ.எம் நொத்தாரிசு)

காரைநகர், மாப்பாணபுரியைப் பிறப்பிடமாகவும், 44, நந்தன காடின்ஸ், பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வநாயகம் (சட்டத்தரணி) 28.06.2006 புதன்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-சரஸ்வதியின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற இராசரத்தினம்-பராசக்தியின் அன்பு மருமகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் பற்குணம், காலஞ்சென்ற செல்லையா, சறோஜினிதேவி மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**தொலைபேசி இலக்கம்**
**2588831**

தகவல்
**மகாலட்சுமி** *(மனைவி)*

(சி/49867)(21.26.19.14)

## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

யாழ்.றோட்டறிக் கழகத்தினால் கடந்த மாதம் நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டிருந்தது.

இந்தச் சீட்டிழுப்புக்கான சீட்டுக்கள் அடுத்தமாதம் வரை விற்பனைக்கு விடப்பட்டு அதன் பின்னரே சீட்டிழுப்பு இடம்பெறும் என்று றோட்டறிக்கழகச் செயலாளர் திருமதி என்.தர்மகுலசிங்கம் தெரிவித்தார்.

## பரீட்சை ஒத்திவைப்பு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கு இன்று நடத்தப்படவிருந்த விஞ்ஞான பாட மதிப்பீட்டுப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். ஈழ ஏதிலியர் மறு வாழ்வுக் கழகத்தின் அனுசரணையு [illegible]


## திருமண அழைப்பு

**அன்புடையீர்!**

**நிகழும் மங்களகரமான வீய வருடம் ஆனிமாதம் 18ஆம் நாள் (02-07-2006) ஞாயிற்றுக்கிழமை பகல் 9.39 மணிமுதல் 11.15 மணிவரையுள்ள சுபவேளையில்**

திரு.திருமதி தம்பித்துரை
தம்பதியினரின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறைசெல்வன்
**சிவகுமார் (சிவா)**
அவர்களுக்கும்



திரு.திருமதி விநாயகமூர்த்தி
தம்பதியினரின்
சிரேஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
**குமுதினி (ஜெயா)**
அவர்களுக்கும்

**திருவருள் துணைகொண்டு மட்டுவில் மத்தி கல்வத்து வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அனைவரும் குடும்ப சமேதராய் வந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

குறிப்பு:- *மேற்படி திருமணம் (27-03-2006) அன்று நடைபெற இருந்து தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு இத்தினத்தில் நடைபெறுகின்றது.*

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்
தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி தம்பித்துரை,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்

திரு.திருமதி விநாயகமூர்த்தி (மூர்த்தி)
பொற்கொல்லர் வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

(51690)(26.19.14)



# IIS COMPUTER COURSES

**A/L 2006**
**பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !**

**உங்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை**

**IIS இல் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்**

**New Batches Start on :**

Batch 1 [ Weekday ] : 23.06.2006
Batch 2 [ Weekend ] : 01.07. 2006
Batch 3 [ Weekday ] : 10.07. 2006
Batch 4 [ Weekend ] : 23.07. 2006
at 09.30 A.M.

**Diploma Courses**

- Diploma in MS Office
- Diploma in Internet Technology
- Diploma in Computer Programming
- Diploma in Desk Top Publishing
- Diploma in Hardware Technology
- Diploma in Eng. Drawing & AutoCAD

**சிறப்புக் கட்டணச் சலுகையில் கணனிக் கற்கைநெறிகள் சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள் !!**

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க **IIS** நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

**INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)**
# 100, Clock Tower Road, Jaffna
Tel : 021 222 2831 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாவதியான பொருள்கள் அழிக்கப்பட்டன

பூநகரி, ஜெயபுரம் பகுதியில் உள்ள விற்பனை நிலையங்களில் திடீர் சோதனை நடத்தப்பட்டு விற்பனைக்கு ஒவ்வாத பொருள்கள் தமிழீழ சுகாதார சேவையினரால் அழிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் இருந்த பல்பொருள் விற்பனை நிலையங்கள், தேநீரகங்கள், உணவகங்கள், அரிசி ஆலைகள், வெதுப்பகங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.இந்த ஆய்வின் போது காலாவதியான உணவுப் பொருள்களான பிஸ்கட், ரின்மீன் போன்றவை பெருமளவில் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டதுடன் சுகாதார சீர்கேடாக இருந்த நிலையங்கள் மீதும் குற்றப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து உணவுப்பொருள்களை கொள்வனவு செய்வோர் பொதி செய்யப்பட்ட திகதி, காலாவதியாகும் திகதி என்பவற்றை கவனத்தில் கொள்ளுமாறு அவற்றில் ஏதாவது சந்தேகம் ஏற்படின் தமிழீழ சுகாதார சேவையின் பிரதேச பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறும் பிரதேச இணைப்பாளர் அரவிந்தன் அறிவித்துள்ளார். (203-405-352)

# தமிழினப் படுகொலையைக் கண்டித்து கோணாவிலில் ஆர்ப்பாட்டப் பேரணி

வட்டக்கச்சி, ஜூன்30

சிறிலங்கா அரசின் தமிழினப் படுகொலையைக் கண்டித்து அக்கராயன் கோணாவிலில் கடந்த வாரம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் பேரணி கோணாவில் தென்னிந்திய திருச்சபைக்கு முன் ஆரம்பமாகி கோணாவில் பொது நோக்கு மண்டப வளாகத்தைச் சென்றடைந்தது.

பேரணியின் போது விடுதலைப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் வாசகங்கள் முழக்கப்பட்டதுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியும் இழுத்துச் செல்லப்பட்டது.

பொது நோக்கு மண்டப வளாகத்தைக் கண்டனப் பேரணி சென்றடைந்ததும் அங்கு கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

கோணாவில் கிராம அலுவலர் அருந்தவச் செல்வம் தலைமையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் கோணாவில் போர் எழுச்சிக் குழு பொருளாளர் உதயகுமார், சிற்சபேசன் அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் மாறன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். (203-405)

# தமிழ்ச்சங்கக் கலைத்திறன் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் திருவள்ளுவர் மாநாட்டு விழாவினை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நாவன்மை, கலைத்திறன் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தஆண்டுக்கான போட்டிகளின் கண்டாவளைக் கோட்ட பாடசாலைகளுக்கிடையான போட்டி முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலயத்திலும் பூநகரி கோட்டத்திற்கான போட்டி ஜெயபுரம் அ.த.க.பாடசாலையிலும் நடைபெற்றன.

இப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள.

**கண்டாவளைக் கோட்டம்**
**நாவன்மைப் போட்டி**

பிரிவு 'ஆ' - இ.றோசன் - பிரமந்தனாறு .ம.வி., சு.உமாதேவி - தருமபுரம் ம.வி., நா.தினியா - கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம்.

பிரிவு 'இ' - எஸ்.சங்கீதா - முருகானந்த ம.வி., பா.துசிதரன் - தருமபுரம் ம.வி., ச.சுகிர்தா - பிரமந்தனாறு ம.வி.

பிரிவு 'ஈ'- வி.பிரகாசினி - நாகேந்திரா வித்தி, வீ.டி..சாளினி - முருகானந்த ம.வி, ம.ஒலிசியா - பிரமந்தனாறு ம.வி.

பிரிவு 'உ' - சி.லக்சிகா - பிரமந்தனாறு ம.வி., சி.கீதாஞ்சலி - முருகானந்த ம.வி., தே.சாம்பவி - பிரமந்தனாறு ம.வி.

**கலைத்திறன் போட்டிக்ள்**

பரதநாட்டியம் (தனி) - அ.தர்சிகா - தருமபுரம். ம.வி.

ஊரகு ஆடல் (குழு) -தருமபுரம் மகாவித்தியாலயம்

**பூநகரிக் கோட்டம்**
**நாவன்மைப் போட்டி**

பிரிவு 'அ' - ஆனந்தநிருயா - பூநகரி ம.வி., வ.தாட்சாயினி - பூநகரி ம.வி.,

பிரிவு 'இ' - சி.இன்வா - கறுக்காய் தீவு அ.த.க.பா., சி.சுயாத்தா - கறுக்காய் அ.த.க. பா., ச.நரேந்தினி - பூநகரி ம.வி.

பிரிவு 'ஈ' - சி.ரோசிகா - கறுக்காய் தீவு அ.த.க.பா, சி.மகீசா - ஜெயபுரம் அ.த.க.பா., ச.லோஜிதன் - ஜெயபுரம் அ.த.க.பா.

பிரிவு' உ - சி.பானுயா - கறுக்காய் தீவு அ.த.க.பா., ச.கேனுயா - ஜெயபுரம் அ.த.க.பா, சி.கௌசிக்ன் -ஜெயபுரம் அ.த.க.பா.

**கலைத்திறன் போட்டி**

குறளிசை (குழு) - நாச்சிக்குடா அ.த.க. பா., ஜெயபுரம் அ.த.க. பா.,

சங்கப்பாடல் - நாச்சிக்குடா அ.த.க. பாட.,

ஊரக ஆடல் - பூநகரி ம.வி.

நாடகம் - பூநகரி ம.வி. (203-405)

## வீடமைப்புக்கு அடிக்கல் நடப்பட்டது

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதியுதவியுடன் அம்பாள்குளம் கிராமத்தில் வீடமைப்புச் செய்வதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வாரம் புனர்வாழ்வுக் குழுத்தலைவர் கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் திருமதி சி.நித்தியானந்தன், நேர்ப் திட்டத்தின் தகவல் கல்வி தொடர்பாடலுக்கான ஆலோசகர் கு.மோகநாதன் கிராம அலுவலர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியேஏர் அடிக்கல் நட்டு வைத்தனர். (203-405)

# உள்ளகப் பயிற்சிபெற்றோருக்கு சுயதொழில் உபகரணங்கள்

கிராமியப் பொருளாதார கல்வி ஆய்வு, அபிவிருத்தி நிறுவனமானது உலக கனேடி பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தி வந்த தொழில்சார் பயிற்சி நெறியின் உள்ளகப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு அவர்கள் சுயமாக தொழில்களை மேற்கொள்வதற்கு தேவையான தொழில்சார் உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்கீழ் ஒலுமடுவில் மேசன் பயிற்சி பெற்றவர்களுக்கும் முத்தையன் கட்டில் நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல் பயிற்சி பெற்றவர்களுக்கும் ஊற்றுப் புலத்தில் மேசன் பயிற்சி பெற்றவர்களுக்கும் உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு 75 பயிற்சியாளர்கள் சுயதொழிலுக்கான உபகரணத் தொகுதியினைப் பெற்றுள்ளனர். (203-405)

# மின்சார விநியோகத்திற்குக் கட்டுப்பாடு

கிளிநொச்சி, ஜூன்30

வன்னிப் பிரதேசத்தில் மின்சார விநியோகத்திற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ நிர்வாக சேவையின் திட்டமிடல் ஆலோசனைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் மின் பிறப்பாக்கிகளுக்கான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தாலும் மின்பிறப்பாக்கியின் றேடியேற்றரைக் குளிரப்படுத்தக் கூடிய தண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற காரணத்தாலும் மின் விநியோகத்தை மட்டுப்படுத்தி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

மின் விநியோக நேரம், தடைப்படும் நேரம் போன்றவற்றின் விவரம் வருமாறு:-

**மின்சார விநியோக நேரம்:**

| | | | | |
|---|---|---|---|---|
| அதிகாலை | 5 மணி தொடக்கம் | - | முற்பகல் | 11.45 மணிவரை |
| பிற்பகல் | 2 மணி தொடக்கம் | - | பிற்பகல் | 4.30 மணிவரை |
| மாலை | 6.45 மணி தொடக்கம் | - | இரவு | 10.45 மணிவரை |

**மின்சாரம் தடைப்படும் நேரம்:**

| | | | | |
|---|---|---|---|---|
| முற்பகல் | 11.45 மணி தொடக்கம் | - | பிற்பகல் | 2 மணிவரை |
| பிற்பகல் | 4.30 மணி தொடக்கம் | - | மாலை | 6.45மணிவரை |
| இரவு | 10.45 மணி தொடக்கம் | - | அதிகாலை | 5 மணி வரை |

(203-405)

## கணனிகளும் மின்பிறப்பாக்கிகளும் வழங்கப்பட்டன

வட்டக்கச்சி, ஜூன்30

முல்லைத்தீவில் நான்கு பாடசாலைகளுக்கு கணனிகளும் மின்பிறப் பாக்கிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

மணலாறு கொக்கிளாயைச் சேர்ந்தவரும் தற்போது புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வசித்து வருபவருமாகிய குழந்தை என்பவரால் இவை வழங்கப்பட்டுள்ளன.

விசுவமடு மகாவித்தியாலயம், தேவிபுரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை ஆகியவற்றுக்கு கணனித் தொகுதிகளும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, கொக்கிளாய் அ.த.க.பாடசாலை ஆகியவற்றுக்கு மின்பிறப்பாக்கிகளும் வழங்கப்பட்டுள்ளன. (203-405)

## மருத்துவ சேவை

வட்டக்கச்சி, ஜூன்30

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் மன்னார் மாவட்டத்தில் பரப்புக் கடந்தான் கிராமத்தில் மருத்துவ வசதி களற்ற மக்களுக்கு நடமாடும் மருத்துவ சேவையும் கருத்தரங்கும் நடத்தப்பட்டு வருகின்றன. (203-405)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## அபிவிருத்தி விழா

பரந்தன், ஜூன்30

முன்பள்ளி அபிவிருத்தி ஆண்டை முன்னிட்டு முல்லைத்தீவு செல்வபுரம் ஜே.ஆர். எஸ் முன்பள்ளியில் அபிவிருத்தி ஆண்டு விழா நடைபெற்றது.

முல்லைத்தீவு முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர் பூ.தட்சாயனி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறார்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் உண்டியல்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மக்கள் நலன்புரிச் சங்க சமூக நலன்திட்ட இணைப்பாளர் செ.தர்சினி, பூ.தாட்சாயினி உட்பட பலர் சிறுவர்களுக்கு உண்டியல்களை வழங்கினர்.

இறுதியாக சிறுவர்களால் பயன்தரும் பழ மரக் கன்றுகள் நட்டு வைக்கப்பட்டன. (203-352)

# கடல்நீர் தடுப்புச் சுவர்கள் இல்லை: நன்னீர் நிலங்கள் உவராகும் நிலை

பரந்தன்,ஜூன் 30

மன்னார் இலுப்பைக் கடவை,மூன்றாம் பிட்டி, தேவன்பிட்டி ஆகிய கிராமங்களில் கடல்நீர் தடுப்புச் சுவர் இல்லாமையால் கிராமங்களுக்குள் கடல்நீர் புகுந்து நன்னீர் நிலங்களை உவர் நிலங்களாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடல் பெருக்கெடுக்கும் போது கடல்நீர் ஆற்றுவழியாக கிராமங்களுக்குள் புகும் நிலை காணப்படுகின்றது.

இதனைக்கருத்தில் கொண்டு மூன்றாம் பிட்டி கிராமத்தில் கடல்நீர் தடுப்புச்சுவர் கட்டுவதற்கான திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

ஆனால் இதுவரை அதற்கான வேலைத் திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

இதன்காரணமாக மக்கள் பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

தடுப்பணைகள் அமைக்கப்படாது விட்டால் இக்கிராமங்கள் உவர்நிலங்களாக மாறிவிடும்.

எனவே உரியவர்கள் இவ் விடயத்தில் அக்கறை கொண்டு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டுமென்று மக்கள் கேட்டுள்ளனர். (203-352)

# நீர்வெறுப்பு விழிப்புணர்வு மாதச் செயற்பாடுகள் வன்னியில் பரவலாக முன்னெடுக்கப்படுகின்றன

கிளிநொச்சி,ஜூன்30

தமிழீழ சுகாதார சேவையினரால் ஜூன் மாதம் நீர் வெறுப்பு நோய் விழிப்புணர்வு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து வன்னிப் பெருநிலப்பரப்பின் பல்வேறு பகுதிகளிலும் கட்டாக்காலி நாயழிப்புச் செயற்பாடுகள், கண்காட்சிகள், கருத்தூட்டல்கள், விழிப்புணர்வு செயற்பாடுகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் ஒவ்வொரு பிரதேசத்திலும் கட்டாக்காலிகளை அழிப்பதற்கு தமிழீழ சுகாதார சேவையாளர், பிரதேச சபையினர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் ஆகிய அனைவரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

நாய்கள் வளர்ப்போர் பிரதேசசபையினரின் அனுமதிப்பத்திரம் வைத்திருந்தல் வேண்டும். வளர்ப்பு நாய்களுக்கு கழுத்துப் பட்டி அணிவிக்கப்படவேண்டும் என்று தெரிவித்து வருகின்றனர்.

இவர்களது செயற்பாடுகள் மூலம் கிளிநொச்சி மாவட்டம் முழுவதிலும் ஆயிரத்தி 343 கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டுள்ளதுடன் 800 இற்கும் மேற்பட்ட நாள்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-405-403-352)



பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் மருத்துவ வசதிகளற்ற கிராமங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினரால் நடமாடும் மருத்துவ சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன. நாச்சிக்குடாவில் மருத்துவ சேவை நடத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரளாவில் தங்கியுள்ள வைகோ அங்கு புலிகளைச் சந்தித்தாராம்!

## மலையாளப் பத்திரிகை கூறுகிறது

திருவனந்தபுரம், ஜூன் 30

இந்திய மாநிலமான கேரளாவில் தமிழகத்தின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தார் என்று மலையாள மொழிப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'ராஷ்டிரதீபிகா' பத்திரிகை இது பற்றி வெளியிட்டுள்ள பிரதான செய்தியில் கூறியிருப்பதாவது:

இலங்கையில் போர் வலுத்துள்ள நிலையில் கேரளாவிலும் தமிழகத்திலும் புலிகள் ஊடுருவி உள்ளதாக தகவல் வந்துள்ளதைத் தொடர்ந்து கேரள மாநில உளவுத்துறை பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது.

கேரளாவில் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளான இடுக்கி, கொல்லம், பாலக்காடு பகுதிகளில் விடுதலைப்புலிகள் ரகசியமாக முகாமிட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளது.

இதைத் தொடர்ந்து கொல்லம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் தங்கியுள்ளவர்களை மாநில உளவுத்துறை தீவிரமாக கண்காணித்து வருகிறது.

இதற்கிடையில் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ ஆயுர்வேத சிகிச்சைக்காகத் தங்கியுள்ளார். சனிக்கிழமையன்று அவர் இடுக்கி மாவட்டம் மூணாறில் உள்ள ஹோட்டலில் சில புலிகள் இயக்க பிரமுகர்களுடன் ரகசிய ஆலோசனை நடத்தியுள்ள விவரங்கள் உளவுத்துறைக்குக் கிடைத்துள்ளது. இந்த விவரங்களை உளவுத்துறை இரகசியமாக விசாரித்து வருகிறது. வைகோ புலிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளதற்கு முழு ஆதாரங்களும் சேகரிக்கும் பணியில் உளவுத்துறை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

தமிழகத்தில் புலிகள் ஊடுருவாமல் இருக்கத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் மத்திய அரசு அதிகாரிகளுடன் தமிழக முதல்வர் கருணாநிதி பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து அங்கே கெடுபிடி அதிகமானதால் அருகில் உள்ள கேரளப் பகுதிகளில் உளவுத் துறையினர் தீவிர தேடுதல் வேட்டையை நடத்தி வருகின்றனர். இந்தப் பகுதியில் உள்ள இலங்கைத் தமிழர் சிலரது வீடுகளில் புலிகள் வந்து தங்கிச் செல்வதாகவும் விவரங்கள் கிடைத்துள்ளது. பெருந்தோட்ட கூட்டுத்தாபனப் பண்ணைத் தொழிலாளிகளுடன் விடுதலைப் புலிகள் அடிக்கடி தொடர்பு கொண்டு வருவதாகவும் உளவுத்துறை தகவல் தெரிவித்துள்ளது.

இதைத் தொடர்ந்து கோவை, பாலக்காடு, தேனி, தேவிகுளம், தென்காசி, செங்கோட்டை, நாகர்கோவில், திருவனந்தபுரம் எல்லைப்பகுதிகள் மற்றும் சாலைகளிலும் கேரளப் பொலீஸார் வாகன சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

கேரளாவில் விடுதலைப்புலிகள்-வைகோ சந்திப்பின் போது என்னென்ன விஷயங்கள் பேசப்பட்டன என்பது பற்றி மத்திய உளவுத்துறையும் தீவிர விசாரணை நடத்தி வருவதாக உளவுத்துறை வட்டாரங்கள் கூறுகின்றன.




கேரளாவில் விடுதலைப் புலிகள்- வைகோ சந்திப்பை தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ள மலையாள பத்திரிகை ராஷ்டிர தீபிகா.

## விவசாய உதவித் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்30

விவசாயிகளின் நன்மை கருதி மானிய உதவித்திட்டங்கள் பலவற்றை சேவாலங்கா நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இதன் ஒரு கட்டமாக தென்மராட்சிப் பிரதேசத்தின் மந்ததுவில், வரணி, கெருடாவில் ஆகிய கிராமங்களுக்கு இரு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

விதை நெல், விதை வெங்காயம் மற்றும் உரவகைகள் வழங்கப்படுவதுடன் நீர் வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக குளங்கள், கிணறுகள் என்பவற்றையும் மீளப் புனரமைத்து வருகின்றது. எதிர்காலத்திலும் இத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென சேவாலங்கா நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

## மலசலகூடங்கள் அமைக்க உதவி

யாழ்ப்பாணம்,ஜூன்30

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மலசலகூடங்களும், பசளைக்குழிகளும் அமைக்கப்படவுள்ளன.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் 60 மலசலகூடங்களும் 450 பசளைக் குழிகளும் அமைக்க நகரசபையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்திட்டத்தினை மேற்கொள்ளும் பயனாளிகளுக்கு மூன்று கட்டடங்களில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (117)

**Save the Children** in Sri Lanka

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

We are looking for a committed, energetic and dynamic individual to join our team as a:

**LOGISTICS OFFICER – RADIO COMMUNICATION/ TRANSPORT**

**Base Station : Jaffna**
**Remuneration : Rs. 27,276/=**

The Logistics Officer -Radio Communication/Transport will be responsible for all communications that pass through the SCiSL Jaffna Office via HF radio, in order to facilitate precise information exchange and security contact with the users of vehicles and staff moving in and out of the District. The incumbent of this position is expected to maintain a log of the movements and positions of all vehicles, map out the security related events on a daily basis, using the relevant map at the District Radio Room and provide up-to-date information, ensuring that the safety practices of SCiSL are abided by at all times. **Only Sri Lankan citizens are eligible to apply for this position.**

**Qualifications & Experience**

**Essential**

1. Good knowledge and experience of handling radio communication and fleet management, including basic administration.
2. Proven experience in similar capacity.
3. Good interpersonal and communication skills in written and spoken English and Sinhala/Tamil with computer literacy in Microsoft Office.
4. Ability to work independently using own initiative within the scope of responsibilities.
5. Ability and willingness to travel to all parts of the country.

**Desirable**

1. Ability to identify vehicle spare parts.
2. Holding a Motor Coach Driving License.
3. Knowledge of third language.

**The above position would be initially for a period of one year.**

Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.

Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.

The position applied for, should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Please ensure that the names of two non-related referees are provided to:

**District Manager**
**Save the Children in Sri Lanka**
**146, Temple Road, Nallur**
**Jaffna**

**Closing Date: 13th July 2006**

Only applicants selected for the interview will be contacted.
No telephone enquiries please

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in 120 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on **Education, Children Affected by Armed Conflict/Disaster, Social Harmony** and **Peace, Temporary Shelter, Livelihoods Recovery and Emergency Preparedness.** Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

**Protecting Rights - Promoting Responsibilities**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 24 - 10 - 1957



விண்ணில் 15 - 07 - 2002

அமரர் **நாகலிங்கம் கந்தசாமி**

*திதி: பூர்வபக்க பஞ்சமி (30.06.2006)*

**பாசத்தின் உறைவிடமாய் அன்பின் திருவுருவாய்**
**குடும்ப விளக்காய் எங்களுக்கு வழிகாட்டிய**
**அன்புத் தெய்வமே!**
**ஆண்டுகள் பல ஓடினாலும் எங்கள் மனம் ஆறவில்லை**
**- ஐயா!**

***உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.***

56, முள்ளி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(51664)(26.45.15)

## பின்னுறுதித் தீர்வை

*மாவட்ட நீதிமன்றம் - யாழ்ப்பாணம்*

கனகராசா காண்டீபன் பெண் கஸ்தூரி,
312, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
- வழக்காளி -

வழ்.இல:- மணநீக்கம்/354. எதிர்

கனகராசா காண்டீபன்,
8/6, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
- எதிராளி -

இவ்வழக்கு 2003ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் வழக்காளியின் சார்பில் சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசாவும் சமுகமாக இருக்கவும். எதிராளிக்கு அழைப்புக் கட்டளை 07.08.2003 ஆம் திகதியன்று உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டும் அழைப்புக் கட்டளை திரும்பல் தினமான 25.08.2003இல் எதிராளி மன்றிற்கு சமுகமளிக்காமையால் இன்று 04.09.2003இற்கு ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கமைய ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு,

வழக்காளியின் பிராது, வ 1 என அணைக்கப்பட்ட ஆவணம் வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவை வழக்கேட்டுடன் பரிசீலனை செய்யப் பட்டு வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதியுடையவர் எனக்கண்டு வழக்காளிக்கும் எதிராளிக்குமிடையே 2003ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பதிவுத் திருமணம் எதிராளி வழக்காளியை அமைநிலையாக வன்ம உறவறுத்துச் சென்றுள்ளார். (Constructive Malicious Desertion) என்ற காரணத்துக்காக இதனால் வெற்றும் வெறிது மாக்கப்பட்டு இரத்துச்செய்யப்பட்டு பின்னுறுதித் தீர்வையளிக்கப்படுகிறது.

மேலும் இந்தப் பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்பட்டதன் பின் இந்த வழக்காளி தன் கன்னிப் பெயரை உபயோகிக்கவும். திருமணமாகாத ஒரு பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் அனுபவிக்க உரிமையுடையவர் எனவும் இதனால் பின்னுறுதித் தீர்வையளிக்கப்பட்டு கட்டளையிடப்படுகிறது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி ''உதயன்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு மூன்றுமாத காலத்துள் எதிராளி ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும்.

*ஒப்பம். இ.த.விக்னராஜா, மாவட்ட நீதிபதி.*

*'மன்றின் கட்டளைப்படி'* து.சிறீமோகன்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
10.11.2003

வரைவு,
(பவானி சற்குணராசா)
வழக்காளியின் சட்டத்தரணி.

(51641)(32.15.45.26)

# இளைஞர், யுவதிகளுக்கு இலவச தொழிற்பயிற்சி

தென்மராட்சி,ஜூன்30

சாவகச்சேரி அறவழிப் போராட்டக் குழுவினர் இளைஞர், யுவதிகளுக்கான இலவச தொழிற்பயிற்சிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

மின்வாயு ஒட்டு (வெல்டிங்), மின்னிணைப்பு, மோட்டார் சைக்கிள் திருத்தல், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்தல், வீட்டு மின்னிணைப்பு, தச்சுத்தொழில், மேசன் தொழில், குழாய் பொருத்துதல், மீளமுறுக்குதல், அலுமினியம் பொருத்துதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பயிற்சிகளும் ஆறு மாத காலங்களுக்கு நடத்தப்படவுள்ளன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோர், இடம்பெயர்ந்தோர், பெற்றோரை இழந்த இளைஞர், யுவதிகள், வலுவிழந்தோர், கணவனை இழந்த குடும்பத் தலைவி, மிகவும் குறைந்த வருமானம் பெறுவோர் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிநெறிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களில் தெரிவுசெய்யும் பயிற்சி நெறியினைக் குறிப்பிட்டு ''அறவழிப்போராட்டக் குழு, கைதடி - நுணாவில், சாவகச்சேரி'' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (117)

## மணிவாசகர் குருபூசை விழா

காரைநகர்,ஜூன்30

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையுடன் இணைந்து நடத்தும் மணிவாசகர் குருபூசை விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு காரை நகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் விசேட சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (204-73)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்30

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் மாணிக்கவாசகர் குருபூசை தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீசட்டநாதர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள், திருவாசகப் பாராயணம் என்பன இடம்பெறும்.

அதேவேளை, மேற்படி மன்றத்தினர் ஏற்பாடுசெய்துள்ள மாணிக்கவாசகர் குருபூசைத்தின நிகழ்வுகள் பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரீ வாலாம்பிகை சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்திலும் நடைபெறும். விசேட பூசை வழிபாடுகள், திருவாசகப் பாடல் பாராயணம் என்பனவும் இடம்பெறும். (204)




## உடையமைத்தல் பயிற்சி ஆரம்பம்

சாவகச்சேரி,ஜூன்30

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனை முறைசாராக் கல்விப் பிரிவினால் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் பெண்களுக்கான உடை அமைத்தல் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறி கடந்த புதன்கிழமை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. (204-31)

# மாணவர் இலக்கிய மன்றங்களை பாடசாலைகளில் அமைக்க ஏற்பாடு

அச்சுவேலி,ஜூன்30

பாடசாலைகள் தோறும் மாணவர் இலக்கிய மன்றம் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாணவர்கள் மத்தியில் தமிழ் இலக்கியம் தொடர்பான ஆற்றலை மேம்படுத்தும் வகையிலும் இலக்கிய அறிவை மேன்மை அடையச் செய்யும் நோக்குடனும் பாடசாலைகள் தோறும் இலக்கிய மன்றம் உருவாக்கப்படவுள்ளது. இலக்கிய மன்றங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய வலய மட்டத்திலும் இலக்கிய மன்றம் உருவாக்கப்படவுள்ளது.

கல்வி வலய மட்டத்தில் உருவாக்கப்படவுள்ள இலக்கிய மன்றத்தில் 1ஏபி, 1சி, தரம் 2 பாடசாலைகளில் இலக்கிய மன்றப் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படவுள்ளனர்.

வலயமட்ட இலக்கியமன்றங்கள் கூடிய விரைவில் அங்குரார்ப்பணம் செய்வதற்கான ஏற்பாடுகள் வலயக்கல்விப் பணிப்பாளர்களின் வழிகாட்டலுடன் தமிழ்மொழிப் பாடத்துறைக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (11)

# அல்லாரை இளைஞனைக் காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்30

அல்லாரை தெற்கு, மீசாலையைச் சேர்ந்த இளைஞரொருவர், புத்தூர்ச்சந்திப் பகுதியிலுள்ள தனது மாமனார் வீட்டில் நின்றிருந்த வேளை படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த கணேசமூர்த்தி ஜெகரூபன் (வயது - 23) என்ற இளைஞரே கைது செய்யப்பட்டவரென முறையிடப்பட்டுள்ளது.

சம்பவதினத்தன்று 'பவள்' கவச வாகனத்தில் வந்த படையினரே இவரைக் கைது செய்ததாகவும்-

நேற்றுமுன்தினமும் அவரது வீட்டைப் படையினர் சுற்றிவளைத்து காவலுக்கு நின்றனர் என்றும் - முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் - குறிப்பிட்ட இளைஞனின் கைது தொடர்பான முறைப்பாட்டை அடுத்து, மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர்.

'இளைஞனின் கைதுகுறித்து நீதிமன்றில் முறையிடப்பட்டுள்ளது அத்துடன், குறிப்பிட்ட இளைஞனை இராணுவத்தினரே கைது செய்தனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சம்பவதினம் மீசாலையைச் சேர்ந்த மற்றொரு இளைஞனும் சீருடையினரால் கைது செய்யப்பட்டார் என்று விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டதாக மனித உரிமை ஆணைக்குழு அலுவலர் ஒருவர் தெரிவித்தார். (ரி)

# அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோருக்கு!

தென்மராட்சி,ஜூன்30

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினூடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில் ஒரு தொகுதியினருக்கான அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

அடையாள அட்டைகள் அந்தந்தக் கிராம அலுவலர்களிடம் வழங்கப்படும் எனப் பிரதேச செயலக அடையாள அட்டைகள் பிரிவினர் தெரிவித்தனர். (117)



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பண்டத்தரிப்பு அம்மன் வீதி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயத்தில் ஜீர்ணோர்த்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவக் குருக்கள் தூபி அபிஷேகம் நடத்துவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

# கிறிஸ்தவரான போப் ஐயரையே மனம் உருகச்செய்த திருவாசகத் தேன்

ஞானக்கதிர்

**இன்று மாணிக்கவாசகர் குருபூசை**

''திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'' என்பது நம் முன்னோர் அனுபவத்தால் கண்டுணர்ந்த முதுமொழி. என்பையும் உருக்கும் தன்மை கொண்ட ஞானப்பனுவல்களாக விளங்கும் திருவாசகம், திருக்கோவையார் பாடல்களை மாணிக்கவாசக சுவாமிகள் பாடினார்.

சைவத் திருமுறைகளில் எட்டாவதாகப் போற்றப்படும் சிறப்புப் பெற்ற திருவாசகம் 51 பகுதிகளையும் 656 பாடல்களையும் கொண்டது. திருக்கோவையாரில் 400 பாடல்கள் உள்ளன.

பாண்டிநாட்டில் மதுரைக்கு அருகில் உள்ள திருவாரூரில் சம்புபாதசிரியருக்கும் சிவஞானவதிக்கும் புத்திரராக அவதரித்த மணிவாசகருக்குப் பெற்றோர் இட்ட நாமம் திருவாதவூரர் என்பதாகும். நாட்டை ஆளும் அரசர்களுக்கு அமைச்சர் வேலையைப் பரம்பரையாகச் செய்துவரும் குலத்தில் தோன்றி, கல்வி, கேள்விகளிற் சிறப்புற்று விளங்கியமையால் மதுரை மன்னன் இவரை அழைத்துத் தன் முதன் மந்திரியாக நியமித்துத் 'தென்னவன் பரமராயன்' என்ற பட்டத்தையும் நல்கினான்.

அரண்மனை வாழ்வும் செல்வ வளங்களும் நிறைந்திருப்பினும் இவற்றை வாதவூரர் பெரிதாக மதித்தாரில்லை. பிறவிப் பிணியை நீக்க, நல்லதொரு வழிகாட்டியை அவரது மனம் தேடியது. வாணிப நோக்கில் திருப்பெருந்துறைக்குப் புறப்பட்ட இவர், இறைவனால் ஆட்கொள்ளப்பெறுகிறார். குருந்த மர நிழலில் குருவாக அமர்ந்திருந்த இறைவனிடம் திருவடித் தீட்சை பெற்றார். ஞானத் தொண்டிற்கு ஆணை பெற்ற அருளாளரின் வாய்ச்சொற்கள் இறை அனுபவப் பனுவல்களாக வெளிப்படுகின்றன. அவை உலகை உய்விக்கும் தெய்வ வாசகங்களாயின.

உணவுப் பொருள்களில் தேன் சிறப்புக்குரியது. மருத்துவ குணங்களைக் கொண்டிருப்பதும் நீண்டநாள்கள் கெடாதிருப்பதும் தன்னுள் அமிழ்ந்தவரைக் கெடுக்காதிருப்பதும் தேனுக்குரிய சிறப்பியல்புகளாம். திருவாசகமும் இத்தகு இயல்புகளைக் கொண்டிருப்பதால் தேனுடன் ஒப்பிடப்படுகிறது.

*''மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன் திருவாசக மென்னுந் தேன்''*

**திருவாசகத்தைத் தேனாகப் பருகி நெஞ்சம் உருகிய கிறிஸ்தவரான ஜி.யு. போப் ஐயர் அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.**

மணிவாசகனார் திருவாசத்தைப் பாட நடராஜனே தன் கைப்பட எழுதி திருச்சிற்றம்பலமுடையார் என்று கையெழுத்தும் இட்டார். திருவாசகத்தின் பொருளை விளக்குமாறு அடியார்கள் கேட்க ஆடவல்லானின் திருவுருவத்தைக் காட்டி அவன்தான் பொருள் என்று கூறி, பாலில் நீர் கலந்தாற் போல அம்பலக்கூத்தனின் திருவருட் சோதியுள் மணிவாசகர் இரண்டறக் கலந்தார்.

திருமுறைப் பாடல்களை உணர்ந்து ஓத வேண்டும். உள்ளக் கமலத்தில் இறைவனை இருத்தி ஓதி உணர்பவர்கள் பிறவியின் நோக்கை இலகுவில் எய்துவர்.

*''சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப் பணிந்து''*



விவிலிய நூலைப் படித்துணர்ந்த கிறிஸ்தவரான ஜி.யு.போப் ஐயர் திருவாசகத்தையும் படித்தார், உருகினார். ''இவரைக் காட்டிலும் எளிமையுள்ளவர் யார்?'' என வியந்தார். திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சமய சமரசம் கண்டார். திருவாசகத்தின் பெருமை தேனாக இனிப்பதற்கு இது வொரு சிறப்பான எடுத்துக்காட்டு ஆகும்.

மணிவாசகரின் குருபூசைத் தினமாகிய இன்றைய ஆனிமாத மக நட்சத்திர நாளில் அவரின் ஞானப் பனுவல்களை ஓதி [illegible] மண்ணின் வாழ்வுக்காகப் [illegible]போம்.

ச.லலீசன்
ஆசிரியர், ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.

# சமய சந்நிதிகளில்

காரைநகர்,ஜூன்30

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் ஆனி உத்திர தரிசன உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிகாலை 4 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பிற்பகல் 3.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று நடராஜாப் பெருமான் திருவீதியுலா வரும் நிகழ்வு நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்30

வல்வெட்டித்துறை மீனாட்சி அம்மன் கோயில் வருடாந்த அபிஷேக விழா நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

10 தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் இறுதி நாளான எதிர்வரும் 8 ஆம் திகதி 108 சங்காபிஷேகம் நடைபெறும். (204)

* * *

தென்மராட்சி,ஜூன்30

சாவகச்சேரி வாரிவளநாத சிவன் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி உற்சவம் நிறைவுபெறும்.

கடந்த 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்த வேளையில் இவ்வாலயம் பலத்த தேசமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (117)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்30

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயப் பெருந்திருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

11 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இனப்பிரச்சினைக்கு அடித்தளமிட்டதே பிரிட்டன்தான் இதை மறந்துவிட்டார் அந்நாட்டுத் தூதுவர்

**இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதர் டொமினிக் சில்கொட், பிரிட்டிஷ் மகாராணியின் பிறந்தநாளையொட்டி கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தை கைவிடவேண்டும் என்று குறிப்பிட்டார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் வெளியிட்ட கருத்து இங்கு பிரசுரமாகிறது.**

இலங்கை என்பது ஒரு நாடு அல்ல. அது பல இனங்களை உள்ளடக்கிய ஒரு தீவாகும். இதனைப் பிரித்தானிய அரசின் முதல் குடியேற்றச் செயலாளர் அரோசிமித் தனது குறிப்பில் தமிழ்ப்பிரிவு தனிப்பிரிவாகவும் சிங்களப் பிரிவு தனிப்பிரிவாகவும் திட்டவட்டமான எல்லைப்பரப்புடன் இலங்கை நிர்வாகம் இயங்கியது என்ற விவரத்தை 1801ஆம் ஆண்டு தந்துள்ளார். ஆனால் 1833இல் இலங்கைக்கு வருகைதந்த கோல்புறூக் ஆணைக்குழு தமது நிர்வாக வசதிக்காக தமிழரின் எல்லைப்பரப்பையும் சிங்களவரின் எல்லைப்பரப்பையும் ஒன்றாக்கியது. கோல்புறூக் ஆணைக்குழு தம்முடைய நிர்வாக வசதிக்காக தமிழ்ப்பிரிவையும் சிங்களப்பிரிவையும் இணைத்தது தமிழன் வாழ்வையே நிர்மூலமாக்கியுள்ளது. தமிழினத்தின் வரலாற்றையே வலிந்து மாற்றியுள்ளது. மன்னிக்க முடியாத இம் முதல் குற்றத்தை செய்தது பிரித்தானிய அரசு.

### பண்டாரநாயக்கா பகன்றவை

ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்றதன் விளைவாக தெளிவோடு சிந்தித்த ஒரு காலகட்டத்தில் குறிப்பாகக் கூறின் 1926இல் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வருகை தந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா கூறிய வரலாற்று உண்மை ; பிற்காலத்தில் அரசியல் நெருக்கடி காரணமாக அவர் தடம்புரண்டபோதும் - இவ்வாறு அமைகிறது. இலங்கை என்பது ஒரு நாடல்ல மாறாக அது ஒரு தீவு. இங்கு கண்டியச் சிங்களவரும் கரையோரச் சிங்களவரும் தமிழர்களும் திட்டவட்டமான எல்லைப்பரப்புகளில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் தமது மொழியை, பண்பாட்டை, நாகரிகத்தை வாழ்வியல் முறையைப் பேணிப்பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறார்கள். இந்த அடிப்படை உண்மையை உணராது இவ் இனங்களை ஒன்றாக்கலாம் என எவராவது நினைப்பார்களாயின் அவர் பொறுப்பற்றவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் - வெள்ளையன் எங்கள் தலைமீது வீற்றிருக்கையில் நாம் வெள்ளையனை எதிர்த்து ஒன்றுபட்டு குரலெழுப்பியது உண்மை. ஆனால், வெள்ளையன் வெளியேறுகின்ற சூழ்நிலை உருவாகின்றபோது ஒவ்வொரு இனமும் தனது தனித்துவத்தை நிலைநாட்டப் போராடுகிறது. இதில் தவறு ஏதும் இல்லை என்றார். அவருடைய பிற்கால அரசியல் வாழ்வு நாட்டில் அழிவிற்கே காரணமாக இருந்தாலும் ஒரு காலத்தில் எந்தவொரு தமிழ்த் தலைவனும் எண்ணிப் பார்க்காத காலகட்டத்தில் எவரும் மாற்றுக் கருத்துக் கூறமுடியாத அளவிற்கு ஒரு பெரும் வரலாற்று உண்மையை அவர் எடுத்துரைத்ததற்கு அவருக்கு நன்றி நவில்வோமாக.

### சோல்பரியின் யாப்பு

நாம் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பயின்ற காலத்தில் சோல்பரி இலங்கையின் முதல் ஆளுநர் நாயகம் சோல்பரியும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சேர்.ஐவர்ஜெனிங்ஸ் அவர்களும் இணைந்து உருவாக்கிய அரசியல் யாப்பை ஏதோ கடவுள் எமக்குத் தந்த கொடையாகக் கருதி நாம் பயிற்றுவிக்கப்பட்டோம். ஆனால், இதே சோல்பரி பி.எச்.பாமர் எழுதிய 'பிரிவுபட்டிருக்கும் இலங்கை' என்ற நூலுக்கு எழுதிய அணிந்துரையில் ஈழத்தமிழ் மக்களுக்கு தான் போதிய பாதுகாப்பை வழங்குகின்ற முறையில் அரசியல் யாப்பை உருவாக்காதது தன் தவறு என ஒத்துக்கொண்டதோடு, மீண்டும் வாய்ப்பிருப்பின் இலங்கை அரசியல் யாப்பை திருத்தி அமைக்க முயல்வேன் என்றும் கூறியுள்ளார்.

இவரின் கருத்தை எதிரொலிக்கின்ற முறையில் இலங்கை அரசியல் யாப்பை உருவாக்கிய சேர்.ஐவர்ஜெனிங்ஸ் பி.பி.ஸியில் நிகழ்த்திய தொடர்சொற்பொழிவில், தமிழ் மக்களுக்கு தக்க பாதுகாப்பினை வழங்கும் முறையில்தான் அரசியல் யாப்பை உருவாக்காதது தன் தவறே என்று கூறியுள்ளார். இருவரும் தம் தவறை ஒத்துக்கொண்ட பெருந்தன்மைக்கு நன்றி கூறுவோமாக. ஆனால், இருவரும் காலம் கடந்த நிலையிலேயே ஞானம் பெற்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### தமிழ்த் தலைவர்கள் செய்த தவறுகள்

இதேவேளை, ஈழத்தமிழினத்தின் தலைமைப்பீடம் ஏதும் தவறு செய்யவில்லை என்று எவரையும் நாம் ஏமாற்ற விரும்பவில்லை. இந்தியாவில் வெள்ளையனே வெளியேறு என்ற கிளர்ச்சி உருவாகிய போது பாகிஸ்தானில் விடுதலைக்காக குரலெழுப்பிய முகம்மது அலி ஜின்னா வெள்ளையனே வெளியேறு ஆனால் நாட்டைப் பிரித்த பின்பு வெளியேறு என்று தொலைநோக்குச் சிந்தனையுடன் எழுப்பிய குரலின் உண்மையை இங்குள்ள எம் இனத்தை வழிநடத்திய தலைமைப்பீடம் உணரத் தவறியது. நடுநிலையில் நின்று வரலாற்றை ஆய்வு செய்பவன் என்ற முறையில் எம் தலைமைப்பீடம் செய்த தவறு மன்னிக்க முடியாத தவறு என்பதை இங்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆனால், "தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஆயுதங்களையும் வன்முறை ஈடுபாட்டையும் துறந்துவிட்டு பயங்கரவாதம் மூலம் அல்லாமல் பேச்சுக்கள் மூலம் தனது முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள முன்வரவேண்டும். அவர்கள் தங்கள் அரசியல் வேட்கைகளை நாட்டின் மக்களாட்சிக் கட்டமைப்புகள் ஊடாக அடைய முயற்சிக்க வேண்டுமே தவிர, குண்டுகள் மற்றும் சன்னங்கள் மூலமாக அல்ல" என்று பிரித்தானியத் தூதுவர் திருவாய் மலர்ந்தருளி இருப்பதை பார்க்கையில் எமக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. உலகம் முழுவதையும் கட்டி ஆண்ட பிரித்தானியப் பேரரசு தாம் என்றுமே தோல்வியடையப் போவதில்லை என்று கொக்கரித்ததை நாம் மறக்கவில்லை. சூரியன் என்றும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அஸ்தமிக்கப் போவதில்லை என்று முழங்கியதை நாம் மறக்கப்போவதில்லை. அரை நிர்வாணப் பக்கீர் எப்படி மன்னன் மாளிகையில் காலடி எடுத்து வைத்து மாட்சிமை தங்கிய மன்னனுடன் உரையாட முடியும் என்று பிரித்தானியப் பேரரசின் தலைமை அமைச்சர் சேர்.வின்சன் சேர்ச்சில் கொக்கரித்ததை நாம் மறக்க வில்லை. இதே தலைமை அமைச்சர் பிரித்தானியப் பேரரசை இல்லாது செய்வதற்காக தான் தலைமை அமைச்சராக வரவில்லை என்று கூறியதும் உண்டு. ஆனால் இதே சேர்ச்சில் உயிரோடு வாழ்ந்தபோது இந்தியா விடுதலை பெற்ற வரலாற்றினை எந்த வரலாற்று ஆசிரியன் மறுக்கமுடியும்.

350 ஆண்டுகள் அயர்லாந்து விடுதலைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கிய பிரித்தானியப் பேரரசு, அயர்லாந்து விடுதலை பெற்றிருப்பதை தடுக்க முடிந்ததா? இதே பிரித்தானியர்கள் அமெரிக்காவில் குடியேறி பொஸ்ரன் தேநீர் விருந்து என்ற பெயரில் ஆயுதம் தாங்கிப் போராடி அமெரிக்கா விடுதலை பெற்ற வரலாற்றினை இங்குள்ள பிரித்தானியத் தூதுவர் தன் வசதிக்காகக் கூட மறக்கமுடியுமா?

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். ஆனால் நடந்தவற்றுக்காக கழுவாய் தேடுகின்ற முறையில் பிராயச்சித்தம் செய்கின்ற முறையில் பிரித்தானிய அரசு இலங்கையில் தமிழீழம் மலர்வதற்கு துணை நிற்காவிட்டாலும் ஊறு செய்யாமல் இருப்பதுவே பிரித்தானிய அரசு செய்யத்தக்க செயலாகும். வேறு சொற்களில் விளம்பின் பிரித்தானியப் பேரரசு ஈழத்தமிழ் மக்களுக்கு உதவி செய்யாதுவிடினும் உபத்திரம் செய்யாது இருப்பதுவே எமக்கு அவர்கள் செய்யத்தக்க பெரும்பணி ஆகும். ஆனால் அவர்கள் ஒன்றை உணர வேண்டும். விடுதலை வேட்கை உடைய இனம் என்றும் அடிபணிந்ததாக வரலாறு இல்லை.


## யாழ்.நகரில் கொம்பியூட்டர் மூலம் கண்பரிசோதனை

COMPUTER EYE TESTING

சொலெக்ஸ் ஒப்ரிக்கல்ஸ்

வாடிக்கையாளர்களின் சிரமங்களை தவிர்த்துக்கொள்ளும் நோக்குடன் கொம்பியூட்டர் மூலம் கண்களை துல்லியமாகப் பரிசோதனை செய்து உடனுக்குடன் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள



சொலெக்ஸ் ஒப்ரிக்கல்ஸ், 516, ஆஸ்பத்திரி வீதி, (OPD முன்பாக) யாழ்ப்பாணம்.


## தீவக நடமாடும் சேவையில் பங்குபற்றும் அலுவலர் விவரம் செயலகத்தினால் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்30

தீவுப்பகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கென நாளை மறுதினம் நடைபெறவுள்ள இடம்பெயர் சேவையில் பங்குகொள்ளும் திணைக்கள உயர் அதிகாரிகளின் விவரங்களை யாழ்.செயலகம் திரட்டிவருகின்றது.

எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வேலணை மத்திய கல்லூரியில் சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் இந்த இடம்பெயர்சேவை இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பங்குகொண்டு சேவையாற்றவுள்ள தீவுப் பகுதி பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் ஆகியவற்றின் உயரதிகாரிகளின் பெயர், பதவி, அடையாள அட்டை இலக்கம் போன்ற விவரங்களை யாழ்.மாவட்ட செயலகம் திரட்டிவருகின்றது. (185)

## பருத்தித்துறை சூட்டுச் சம்பவம்; மனித உரிமை அலுவலர்கள் நேரில் சென்று விசாரணை

யாழ்ப்பாணம்,ஜூன்30

பருத்தித்துறை, வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கையில் கடந்த செவ்வாயன்று மாலை குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் குறித்து, மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் நேற்றுமுன்தினம் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்து விசாரணை நடத்தினர்.

உயிரிழந்த நபரான கனகரத்தினம் யோகராஜா அம்பாறை மாட்டம், ஒலுவிலைப் பிறப்பிடமாகவும் கல்வயல், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொணடவர் என்றும் -

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், தமது மனைவியான யோகராஜா புஸ்பராணி கடந்த 25.12.2005 அன்று சாவகச்சேரி நகரில் வைத்து சீருடையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததை அடுத்து வடமராட்சி, தும்பளையில் தற்காலிகமாக வசித்து வந்ததை விசாரணையின்போது தெரிய வந்ததாகவும் விசாரணை நடத்திய மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.


## யாழ். நகரிலேயே அதிவிரைவான சேவை

கடிதங்கள், உணவு, உடை, வீடியோப் பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் எவையானாலும் எந்த அளவினதானாலும் அதி விரைவாக உங்கள் வெளிநாட்டு உறவுகளின் கைகளுக்கு அனுப்பிவைக்கலாம்.

சுவிற்சர்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg இற்கான கட்டணம் 650/= மட்டுமே

லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg இற்கான கட்டணம் 500/= மட்டுமே

ஐரோப்பா, கனடா ஆகிய நாடுகளுக்கான பொதிகளுக்கு விசேட சலுகைகள்

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 7835

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) தொ.பே. 222 7310.

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. தொ.பே.: 021-226 4252, Fax: 021-2264253


## மரண அறிவித்தல்



### இளையவி தங்கராசா

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - உள்ளூராட்சித் திணைக்களம்)

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், பன்னாலை, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக துரைவீதி, தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி தங்கராசா 28.06.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையவி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் வேவியின் அன்புக் கணவரும் கலைவாணி (கனடா), பகீரதன் (பொறியியலாளர், லண்டன்), கலைவதனி (பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுந்தரலிங்கம் (கனடா), பவானந்தன் (மாலைதீவு) ஆகியோரின் மாமனும் துர்க்கா, சாருகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்.

துரை வீதி, தாவடி வடக்கு, T.P. 0777853948

(51690)(21-32-45-15)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 27 - 07 - 1924



விண்ணில்: 11 - 07 - 2005

### அமரர் சிவகுரு கந்தவனம்

திதி: பூர்வபக்க பஞ்சமி

எம் குடும்பத் தலைவரே நீங்கள் இப்பூவுலகைவிட்டு நீங்கி ஓராண்டு நிறைவில் தங்களை நினைவு கூரும்...

'குருஸ்தான்' புனாவில் மேற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(51701)(32-45-15)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கு காஸா பிரதேசத்துக்குள்ளும் இஸ்ரேலியப் படைகள் நுழைந்தன

## மேற்குக்கரையில் அமைச்சர்கள் பலர் வீட்டுக்காவலில்



டெல்அவில்,ஜூன்30

இஸ்ரேலிய டாங்கிப் படைகள் வடக்கு காஸா பகுதிக்குள் எல்லைகளைக் கடந்து நுழைந் திருப்பதாக செய்திகள் வந்துள்ளன.

ஏற்கனவே தென்காஸாவுக்குள் இஸ்ரேலியர் பெரும் எடுப்பில் படை நகர்த்தியுள்ள நிலையில் இப்பொழுது வடகாஸாவுக்குள்ளும் நுழைந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இஸ்ரேலியப் படைவீரர் ஒருவரை பலஸ்தீன கெரில்லாக்கள் கடத்திச் சென்றதையடுத்து இஸ்ரேல் இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

**அமைச்சர்கள் வீட்டுக்காவலில்**

மேற்குக்கரையில் இஸ்ரேலியப் படையினர் ஹமாஸ் இயக்கத்தின் சட்டசபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் பத்துப் பேரை தடுத்துவைத்திருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஜெனின் மற்றும் ரமல்லா நகரங்கள் மீதான தாக்குதலின் பின்னர் காஸாவில் வைக்கப் பட்டுள்ளவர்களில் பிரதி பிரதம மந்திரி நாஸர் அல்ஷா ஹெர் உட்பட 4 அமைச்சர்கள் அடங்குவர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்குக்கரை நகரான கல்கில்யாவில் ஹமாஸ் மேயர் மற்றும் அவருடைய பிரதி மேயரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று இஸ்ரேலியப் படை நிலையொன்றைத் தாக்கிய பலஸ்தீன தீவிரவாதிகள் ஜிலாத் ஷாவிட் என்ற போர்வீரனைக் கடத்திச் சென்றனர். இரண்டு இஸ்ரேலியப் படையினரையும் கொன்றனர்.

பிடித்துச் செல்லப்பட்ட படைவீரரை மீட்டெடுப்பதற்காக உச்ச நடவடிக்கைகளை எடுக்கவும் தயங்கப் போவதில்லையென்று இஸ்ரேலியப் பிரதம மந்திரி எஹிட் ஒல்மேர்ட் கூறியுள்ளார். (ப)

# அ.தி.மு.கவிற்கு ஒளிமயமான எதிர்காலம் நம்பிக்கையூட்டுகின்றார் ஜெயலலிதா

சென்னை ,ஜூன்30

அ.தி.மு.க., அசைக்க முடியாத இமயம். நமக்கு ஒளிமயமான எதிர்காலம் உள்ளது. இந்த அரசு நீண்டநாள் நிலைக்கும் என்பதில் அவர்களுக்கே நம்பிக்கையில்லை. எனவே விரைவில் மாற்றம் ஏற்படும் என்று சென்னையில் நடந்த இலவச திருமண மண்டப ஆரம்ப விழாவில் ஜெயலலிதா நம்பக்கை தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்:-

சைதை துரைசாமி அவரது சொந்தச் செலவில் மனிதநேய அறக்கட்டளை சார்பில் இந்த திருமண மண்டபத்தை கட்டியிருக்கிறார். இதுகவினர் அனைவருக்கும் மனித நேயம் உண்டு. அந்த உணர்வின் அடிப் படையில் ஜாதி, மத பேதம் இல்லாமல் பொதுமக்கள் பயன் பெறும் வகையில் இந்த மண்டபம் கட்டியிருக்கிறார்.

தற்போதைய முதல்வர், அரச நிர்வாகத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்று நான் நினைக்கிறேன். நான் என்ன சொல்கிறேன் என்பதை பத்திரிகையில் ஒரு வரி விடாமல் படித்து அதற்குப் பதில் கூறுவது தான் அவர் வேலையா? இதைவிட்டால் அவருக்கு வேறு வேலையே இல்லையா? மூன்றாவது அணி குறித்து நான் ஏதும்பேசவில்லை. பத்திரிகையாளர்கள் அது குறித்து கேட்டபோது சில தேசியத் தலைவர்களை அது தொடர்பாக சந்தித்ததாக கூறினேன். அதைக் கேள்விப்பட்டதைத்தொடர்ந்து கருணாநிதிக்கு துக்கம், நிம்மதி இரண்டும் இல்லை. மார்க்சிஸ்ட் எங்களைச் சேர்க்க மாட்டோம் என்று கூறிவிட்டதாக கூறி வருகிறார். அவருக்கு அவ்வளவு பயம் வந்துவிட்டது.

இந்த அரசு நீண்டநாள் நிலைக்கும் என்று அதிகாரிகளும் நம்பவில்லை, தி.மு.க., வினரும் நம்பவில்லை. எனவே நம் கட்சியினர் உற்சாகமாக இருங்கள். விரைவில் மாற்றம் ஏற்படும். -இவ்வாறு ஜெயலலிதா தெரிவித்தார். (202)

## மாற்று எலும்பு உருவாக்கத்திற்கு சிலந்தியிலிருந்து புதிய கண்டுபிடிப்பு

மாற்று எலும்புகள் (Replacement bones) உருவாக்கவதற்கு சிலந்தி வலை இளையுடன்சிலிக்கன் டை ஒட்சிசனை கலந்து ஒரு நுண்ணிய பொருளை உவாக்கியுள்ளதாக டாக்டர் எஸ்.எம்.பி. முத்து அறிவித்துள்ளார்.

சிலந்தி வலையின் பலமும் சிலிக்காவின் வளையாத தன்மையும் ஒருங்கிணைந்து மாற்று எலும்புகளை உருவாக்குவதற்கு உதவுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (202)

# நெருங்கியது செயற்கைக்கோள்: தப்பியது விண்வெளி நிலையம்

மொஸ்கோ,ஜூன்,30

சர்வதேச விண்வெளிநிலையத்தில் அமெரிக்காவால் கைவிடப்பட்ட செய்கைக்கோள் மிகமிக நெருக்கத்தில் கடந்து சென்றது.

ஹிட்ச் ஹைக்கர் என்ற செயற்கைக்கோளை அமெரிக்கா 1963 ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தியது.79 கிலோ எடை கொண்ட இந்த செற்கைக்கோளின் பயன்பாடுகள் முடிந்துவிட்டதால் இதை அமெரிக்கா கைகழுவிவிட்டது. இந்த செயற்கைக்கோள் இப் போது விண்ணில் சுற்றி வருகிறது.

விண்வெளி ஆராய்ச்சிகளுக்காக விண்ணில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தை 240 மீற்றர் தூரத்தில் மாஸ்கோ நேரப்படி நேற்றுமுன்தினம் மாலை 6.31 மணிக்கு 'ஹிட்ச் ஹைக்கர்' கடந்து சென்றது. இந்தத் தகவலை ரஷ்ய விமான போக்குவரத்துக் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்தது. சர்வதேச விண்வெளி நிலையம் மீது அமெரிக்க செயற்கைக்கோள் மோதக்கூடும் என்று அஞ்சப்பட்டது.ஆனால், அதிர்ஷ்டவசமாக அப்படிஎதுவும் நடக்கவில்லை.

இந்தச் செயற்கைகோள் பற்றி இனி கவலைப்படத் தேவையில்லை என்று ரஷ்ய கட்டுப்பாட்டு மையமும் அமெரிக்க விண்வெளி நிறுவனமான 'நாஸா' வும் தெரிவித்தன. (200)

## மசூதிமீது தாக்குதல்

ஈராக் நாட்டில் சன்னி -ஷியா முஸ்லிம்களுக்கு இடையே நடந்த மோதலின் போது ஒரு சன்னி மசூதி மீது ஷியா முஸ்லிம் தீவிரவாதிகள் குண்டுவீசித் தாக்கியுள்ளார்கள். இதனால் அந்த மசூதி தீப்பிடித்து எரிந்தது. அதன் அருகே இருந்த 20 கடைகளும் எரிந்தன. இந்தச் சம்பவம் தியாலா மாநிலத்தில் உள்ள பக்பா நகர் அருகே உள்ள ஷகராபான் என்ற இடத்தில் நடந்தது. (202)

# இராணுவ உதவிகளை நிறுத்தக்கோரி பிரதமருக்கு கடிதங்களை அனுப்புங்கள்

## தமிழர் அமைப்புகளிடம் வீரமணி வேண்டுகோள்

இலங்கைக்கான இந்திய இராணுவ உதவியை தடுக்கக் கோரி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு கடிதங்களை அனுப்புமாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

இலங்கை அதிபருக்கு அறிவுரை கூறும் வகையிலும், இந்தியாவின் நிலைப்பாடு நடுநிலை சமரச மனப்பான்மைதான் என்று காட்டும் வகையிலும் பேச்சுகள் மூலம் இந்த நீண்டநாள் சிக்கலை இருதரப்பும் அணுகவேண்டும் என்றும் பிரதமர் மன்மோகன் சிங் கூறியதை நாம் வரவேற்கிறோம்.

தமிழர்கள் மீது, ஒருபுறம் பேச்சுக்கு அழைத்துக்கொண்டே அங்குள்ள இராணுவம் இருமுனைத் தாக்குதலை மறுபுறம் நடத்துகின்றது. ஒரு முனையில் இராணுவத்தின் குண்டு வீச்சு (தேவாலயதிற்குள் நுழைந்த மக்கள் மீதும் குண்டு வீச்சு)மற்றொருமுனையில் கருணா என்ற விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒரு துரோகக் கும்பலுக்கு ஆயுதஉதவி உட்பட எல்லாம் செய்து அவர்களை விட்டும் தாக்குதலை தொடரச் செய்யும் போது, ஈழத் தமிழர்களின பாதுகாப்புக் கேடயமான விடுதலைப்புலிகள் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்க இயலாததுதானே!

இராணுவ நடவடிக்கைகளால் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு இலங்கை அரசு தீர்வு காண முடியாது என்று பிரதமர் கூறிடும் நிலையில், இலங்கை அரசுக்கு ராடர் போன்ற இராணுவத்திற்கு உதவக்கூடிய பல கருவிகளை அனுப்பும் செயல் அப்பட்டமான தமிழர் விரோத நடவடிக்கை அல்லவா?

தலையிட மாட்டோம் என்றால் அதையாவது முறையாகக் கடைப் பிடிக்க வேண்டாமா? எனவே, இலங்கைக்கு இராணுவ உதவி செய்வதை உடனே நிறுத்தவேண்டும், தமிழ் நாட்டுத் தமிழர்கள் மட்டுமின்றி, உலகத் தமிழர்களின் உணர்வுகளை நாம் ஒட்டு மொத்த பிரதிபலித்து இதைக் கூறுகிறோம், தமிழக அரசும், முதல்வரும் மத்திய அரசுக்கு இதனை வற்புறுத்த வேண்டும். (202)

# இலங்கைக்கு இந்தியா 'ராடர்' உதவி

## பா.ம.க. தலைவர் ராமதாஸ் கண்டனம்

கொழும்பு, ஜூன் 30

இந்தியா, இலங்கைக்கு 'ராடர்' கருவிகளை வழங்கியதாக ஊடகங்களில் வெளியான செய்தி தமக்கு அதிர்ச்சி அளிப்பதாக பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான இராணுவ உதவிகளை இந்தியா இதுவரை செய்யவில்லை என்றால் இனிமேலும் செய்யக்கூடாது என்றும் -அந்த அறிக்கையில் அவர் கோரியுள்ளார்.

இந்தியாவின் இராணுவத் தளபாட உதவிகளை இலங்கையில் அரசியல் உரிமைகளுக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் போராடி வருகின்ற தமிழர்களுக்கு எதிராகத்தான் இலங்கை அரசு பயன்படுத்தப்போகின்றது என்பதை இந்தியா மறந்துவிடக்கூடாது என்றும் ராமதாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இனிமேல் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா எத்தகைய நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் தமிழக அரசுடனும், தமிழக அரசியல் கட்சித் தலைவர்களுடனும் கலந்து பேசி அவர்களின் ஒருமித்த ஆலோசனைக் கேற்ப நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்றும் ராமதாஸ் கேட்டுக்கொண்டார்.

## உலக அரங்கில்

### சதாமின் சட்டத்தரணிகளுக்கு பாதுகாப்பு வழங்ககோரிக்கை

வாஷிங்ரன்,ஜூன்30

சதாம் ஹுசேனின் வக்கீல்களுக்கு அமெரிக்கா போதுமான பாதுகாப்பு வழங்காதவரை அவர் மீதான வழக்கில் நடுநிலையான விசாரணை நடக்காது என அமெரிக்க முன்னாள் சட்டமா அதிபர் ராம்சே கிளார்க் தெரிவித்தார்.

சதாம் சார்பில் ஆஜராகும் வக்கீல்கள் ஒவ்வொருவராக அடுத்தடுத்து கொல்லப்பட்டு வருகின்றனர். அண்மையில் அவரது வக்கீல் கமீஸ் அல் என்பவர் படுகொலை செய்யப்பட்டார். இவருடன் சேர்த்து சதாமின் வக்கீல்கள் மூன்று பேர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்.

இது குறித்து சதாமின் மற்றொரு வக்கீலும் அமெரிக்க முன்னாள் சட்டமா அதிபருமான ராம்சே கிளார்க், சதாமுக்கு எதிரான வழக்கு விசாரணையில் ஆஜராகும் வக்கீல்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். பாதுகாப்பு வழங்காதவரை நியாயமான, நடுநிலையான விசாரணை என்பது இயலாத காரியம். எந்வொரு சூழ்நிலையிலும் அமெரிக்கா மட்டுமே அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியும் - என்றார். (202)

# நேபாள அபிவிருத்திப் பணிக்கு இந்தியா 850 கோடி நிதி உதவி

காத்மண்டு,ஜூன்30

நேபாளத்தின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கென 850 கோடி ரூபாவை இந்தியா வழங்கவுள்ளது இதுதொடர்பான ஒப்பந்தத்திலும் கையெ ழுத்திட்டுள்ளது.நேபாளத்தின் சமூக - பொருளாதார வளர்ச்சிக்காக இந்தியா பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. குறிப்பாக அந்நாட்டின் போக்குவரத்து வசதிகள்ள மேம்படுத்தும் நடவடிக்கைகளில் பெரும்பங்கு வகிக்கிறது. நேபாளத்தின் முக்கிய நகரங்களுக்கு இடையே வீதி அமைத்தல், விமான ஓடுதளம் அமைத்தல் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள 850 கோடி ரூபாவைத் தருவதற்கு இந்திய அரசு [illegible] இந்த நிதியை அளிப்பதற்காக இருநாடுகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கையெழுத்தானது. (202)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6. T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T:021 222 6242
0212223984
Fax: 021 222 5600
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri. T:021 2227979
Fax: 021 2227979
New way of Flying



யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கட்டடம் விற்பனைக்கு

நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதிக்கருகில் 2 பரப்புக் காணியுடன் நவீன வசதிகளுடன் கூடிய கட்டடத் தொகுதி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777- 271225. (சி-49864)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

35 நாளில் 2 Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை. மதுரா- ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். றாஜீவ் கால் நடைத் தீவன விற்பனை நிலையம் - மாதகல் வீதி, பண்டத்தரிப்பு T.P. No. 222 2867, 222 3529 (51663)

## மணப்பெண்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973 (MBBS) Doctor, 1974 (MBBS) Doctor, 1974 சிவில் எஞ்சினியர், 1975 சிவில் எஞ்சினியர், 1974 B.A. மாஸ்ரர் இவர்களுக்கு அழகிய மணப்பெண்கள் தேவை. தொடர்பு: கிருஷ்ணா திருமண சேவை, T.சுப்பையா, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் T.P 9032. (51703)

## கைதடி தபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம்

கைதடியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த அஞ்சல் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் எதிர்வரும் 7ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். அரச அதிபர் கே.கணேஸினால் நட்டு வைக்கப்படவுள்ளது. இக்கட்டடம் அமைப்பதற்கான காணியை கைதடி வடக்கு, கைதடியைச் சேர்ந்த இ.கந்தசாமி என்பவர் தனது தந்தையின் ஞாபகார்த்தமாக வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## சிறுகைத்தொழில் பயிற்சி ஆரம்பம்

சாவகச்சேரி, ஜூன்,30

மட்டுவில் வடக்கு கியூடெக் உயிர்ப்பூட்டல் குழு உறுப்பினர்களுக்கு சிறு கைத்தொழில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு நாளை சனிக்கிழமை மட்டுவில் வடக்கு சபீனா பாலர் பாடசாலைக்கு அருகில் நடைபெறவுள்ளது. ஊதுபத்தி, கற்பூரம் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (31)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூன்,30

குடாநாட்டில் அஞ்சல் திணைக்களத்தினால் நடமாடும் சேவைமூலம் மாணவர்களுக்கான அஞ்சல் அறிமுக அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பாடசாலையிலும் நூறு விண்ணப்பங்கள் வரை கிடைக்கப்பெற்றவுடன் அஞ்சல் திணைக்களத்துடன் தொடர்புகொண்டால் இந் நடமாடும் சேவையை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமென்றும்-

இந்த விடயம் தொடர்பாக பாடசாலை அதிபர்கள் கூடிய கவனம் செலுத்தினால் மாணவர்களுக்கான அறிமுக அட்டைகள் வழங்கும் பணியை துரிதப்படுத்த முடியுமெனவும் - அஞ்சல் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்துள்ளன. (ரி)

## கத்தரி மலிவு விலையில்

கொடிகாமம் சந்தையில் கத்தரிக்காய் மலிவு விலையில் விற்கப்படுகிறது.கிலோ பத்து ரூபாவிற்கு தற்சமயம் பாவனையாளர்கள் வாங்கக் கூடியதாக உள்ளது.

அதேவேளை, பெருமளவு பலாப்பழமும் நாளாந்தம் விற்பனைக்காக இங்கு எடுத்து வரப்படுகின்றது.பலாப்பழமும் மலிவு விலையில் விற்கப்படுகின்றது.பெருமளவு பலாப்பழம் வடமராட்சிப் பகுதிக்கு இங்கிருந்து வியாபாரிகளால் எடுத்துச் செல்லப்படுவது குறிப்பிடத்தக்கது. (122)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 8, O/L, A/L, B.A மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் கதைக்க இலக்கணம் வினாவிடை வகுப்புகள் மாதாந்தக் கட்டணம் முறையே 50/- 100/- 150/- 200/- By: விக்னேஸ்வரன் ஆச்சாரி 426,(302), K.K.S Road, Jaffna.
(51709) THE ROYAL IS THE BEST (21.15.17)

**விற்பனைக்கு**

P III, P I PROCESSOR
p III, MOTHER BOARD
P IV, AMD PROCESSOR
மு.சந்திரகுமார் சங்கானை 29
T.P.: 0776510376 (சி-49875)

**STAR Chunnakam**

Special English course

- Writing
- Reading
- Speaking
- Listening

ஆகிய திறன்களை உள்ளடக்கியது
ஆரம்பம்: 01.07.2006 சனி பகல் 12.30
By: Mr.P.Mathan Dip. in Eng,
Sat.Sun 12.30 - 1.30
(51702)(21.15.17)


# சேவை நலன் பாராட்டு

சேவை ஆரம்பம் 01 - 11 - 1968



சேவை நிறைவு 30 - 06 - 2006

**தைரியநாதன் பேர்னாண்டோ மனோகரன்**
B.A., Dip., in. Edu. SLPS I

38 வருட காலக் கல்விச் சேவையிலே 21 வருடங்கள் ஆசிரியராகவும், 17 வருடங்கள் அதிபராகவும், அதில் 14 வருடங்கள் எமது பாடசாலையின் அதிபராகவும் சேவையாற்றி 30.06.2006இல் ஓய்வுபெறும் எமது கல்லூரி அதிபரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உப அதிபர்,
பிரிவுத் தலைவி,
ஆசிரியர்,
மாணவர்.

யா/வதிரி திரு இருதயக் கல்லூரி
கரவெட்டி. (51704)(21.15.17)


**IBMS**

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I : 18.06. 2006
பிரிவு II : 21.06. 2006
பிரிவு III : 02.07. 2006
பிரிவு IV : 10.07. 2006
பகல் 10.00 மணி

பதிவுக் கட்டணம் முற்றிலும் இலவசம்

**Diploma Courses**

Dip. in MS Office
Dip. in Desk Top Publishing
Dip. in Internet Technology
Dip. in Hardware Engineering
Computerized Accounting (Tally 7.2)

Head Office : # 209, Manipay Road, Vaitheeswara Junction, Jaffna.
Tel : 021 222 8232 Email : ibms_jaffna@rediff.com
Branches : ◆ NMMV Road, Nelliady ◆ Sangaththanai, Chavakachcheri


## கொக்குவில் நந்தாவில்
## கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய
## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

இன்று (30.06.2006) வெள்ளிக்கிழமை **கொடியேற்றம்** காலை 10 மணி
02.07.2006 ஞாயிற்றுக்கிழமை **மஞ்சத்திருவிழா** மாலை 4 மணி
06.07.2006 வியாழக்கிழமை **கைலாய வாகனத் திருவிழா** மாலை 4 மணி
08.07.2006 சனிக்கிழமை **சப்பரத் திருவிழா** மாலை 4மணி
09.07.2006 ஞாயிற்றுக்கிழமை **தேர்த்திருவிழா** (இரதோற்சவம்) காலை 7 மணி
10.07.2006 திங்கட்கிழமை **தீர்த்தோற்சவம்** காலை 7 மணி
11.07.2006 செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம், மாலை 4.30 மணிக்கு **பூங்காவனம்**

*தினமும் காலை 7.45 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகும்*
*வசந்த மண்டபப்பூஜை காலை 9 மணி*
*வசந்த மண்டபப் பூஜை மாலை 3.45 மணி*

*- ஆலயப் பரிபாலனசபையினர்.*
(51706)(21.15.17)

## நீங்காத துயரில் நாமும் இணைகின்றோம்

## செல்லத்துரை செல்வநாயகம்

(Attorney At.Law, J.P.u.m Sri Lanka)

அவர்களின் மறைவையிட்டு அன்னாரிற்கு எமது அஞ்சலியைத் செலுத்துவதுடன்,அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொக்குவில். (51710)(21.15.17)



உ

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம்
## ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

## மஹோற்சவ விஞ்ஞாபனம் -2006

01-07-2006 சனிக்கிழமை பகல் 11 மணிக்கு - **கொடியேற்றம்**
08-07-2006 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு - **சப்பரம்**
09-07-2006 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு - **இரதோற்சவம்**
10-07-2006 திங்கட்கிழமை பகல் 11.30 மணிக்கு - **தீர்த்தோற்சவம்**
11-07-2006 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு - **பூங்காவனம்**

- தேவஸ்தான பரிபாலன சபை

கல்வயல்,
சாவகச்சேரி. (51700)(21.15.17)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 05 - 08 - 1984



ஆண்டவன் மடியில் 22 - 06 - 2004

## செல்வன் நவரத்தினராசா நிமல்

அன்பின் திருவுருவமே!
பாசத்தின் சிகரமே!
விதி என்ற பெயரால் மதி செய்த சதியால்
கணப்பொழுதில் எம்மை பிரிந்ததேனோ?
நீ பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆனாலும்
உன் நினைவு எம்மைவிட்டு போகாது ஐயா!
கனவுகள் நிறைந்த பூவே வாடமுன் உலர்ந்ததேனோ?

*உன் பிரிவால் வாடும்:*
த.நவரத்தினராசா (அப்பா),
திருமதி ந.விமலேஸ்வரி (அம்மா),
செல்வி ந.கீதா (தங்கை),
திரு.திருமதி சோ.லோகேஸ்வர சர்மா,
(பெரியப்பமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார்).

*சந்திரபுரம்,*
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.*
(51695)
(32.21.15.14)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவயோகம் மயில்வாகனம்



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் 31, வைரவ கோயில் வீதி, வைரவ புளியங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகம் மயில்வாகனம் அவர்கள் 28.06.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் மயில்வாகனம் (முன்னாள் பிரபல வர்த்தகர் S.S.M. தெல்தோட்டை) அவர்களின் அன்பு மனைவியும் தேவராசா (Seylon Bank, Vavuniya). தெய்வேந்திரராசா (France), கனகரட்ணம் (France), கோபாலசுதந்திரன் (Canada), சிவராசா (Canada) ஆகியோரின் அன்பு தாயும் நாகேஸ்வரி, பவானி, மனோரஞ்சித மலர், அகல்யா, வாசுகி ஆகியோரின் அன்பு மாமியும் பைரவி, ஆரணி, நவநீதன், திவ்வியா, வித்தியா, வெனுசா, சுதர்சன், சகீஸ்னன், நிதுஷா, சஞ்சீவன், சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.07.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சனாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31, வைரவ கோயில் வீதி,
வைரவ புளியங்குளம்,
வவுனியா.
தொ.பே.: 024 2222514

தகவல்:
ம.தேவராசா
(மகன்).
(சி-49876)(21.15.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

காட்சி நேரம் : 10.30, 2.30

ஜித்தன் புகழ் ரமேஸ், பிரியாமணி, விவேக் நடித்த

மது

(சி-49188)

3ஆவது வெற்றி வாரமாக



யுனிவர்சிட்டி புகழ் ஜீவன், சோனியா அகர்வால், விவேக் நடித்த

திருட்டுப் பயலே

மனோகரா யாழ்ப்பாணம்

10.30, 2.30, 6.30 மட்டும்

ராஜா யாழ்ப்பாணம்

கரன், சாதனா நடித்த

கொக்கி

(சி-47139) புதிய வெளியீடு

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்


## ST. PATRICK'S COLLEGE JAFFNA

*சகல க.பொ.த (சாதாரண தர) மாணவர்களும், மீள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்களும் எதிர்வரும் 03.07.2006 திங்கள் காலை 9 மணிக்குத் தவறாது சமுகம் தரவும்.*

-அதிபர்

சி/49884

## கெருடாவில் மாவடிப் பிள்ளையார் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

08.06.2006 வியாழக்கிழமை முதல் தொடர்ந்து 24 நாள்கள் நடைபெற்று மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா நாளை (01.07.2006) சனிக்கிழமை நடைபெறும்.

1008 சங்காபிஷேகம் நண்பகல் நடைபெற்று இரவு விநாயகப் பெருமான் முத்துச் சப்பறத்தில் வீதியுலா வருவார்.

ஆதினகர்த்தா,
சோ.கணேசமூர்த்தி.

(51728)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை துரைச்சாமி

(மின்சார சேவையாளர்)



தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், தேவாலயவீதி மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை துரைச்சாமி நேற்று (29.06.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், செல்வபாக்கியத்தின் அன்புக் கணவரும் கிறிஸ்ரின் புஸ்பம் (ஜெயந்தி, தட்டெழுத்தாளர்), ஆன்சலோன் (றஞ்சன், மின்சார சேவையாளர்), ஆன்ஸ்ரன் (றூபன்-மின்சார சேவையாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மரிய கொறற்றி (வவா), றெபேக்கா ஆகியோரின் அன்பு மாமனும், டிஜிற்றா, ஸ்ரெபனியா, மக்னோல்ட், கிருஷான், டிலுக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், திரவியம், செல்வராசா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.07.2006) சனிக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லதிலிருந்து மல்லாகம் புதுமை மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கற்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தேவாலய வீதி,
மல்லாகம்.


சீட்டிழுப்பு இல. 1722

28.06.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

01 43 53 55 07

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 201253269 இலிருந்து 201269113

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 1,54,01,200/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,54,01,200/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 2 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 26 | 5,000/- | 1,30,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 423 | 1,000/- | 4,23,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,297 | 500/- | 6,48,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 20,879 | 40/- | 8,35,160/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 19,740 | 20/- | 3,94,800/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,95,296 | 10/- | 29,52,960/- |
| மொத்தம் | | | 73,84,420/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், சைக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,37,668 | | 79,84,420/- |

தொடர் இல. 301171475 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜூலை மாதம் 01 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,61,90,400/-

| | |
|---|---|
| கம்பஹா | 201268224-4-08 |
| கம்பஹா | 201267856-3-42 |
| களுத்துறை | 201257315-7-25 |
| அனுராதபுரம் | 201259122-5-42 |
| பதுளை | 201256216-0-72 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03


## அறிமுக நிகழ்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்30

யாழ்.பல்கலைக் கழகத்தின் கலைப்பீடப் புதுமுக மாணவர்களுக்கு எதிர்வரும் 3ஆம் திகதி இடம்பெறவிருந்த அறிமுக நிகழ்வு மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என கலைப்பீடாதிபதி அறிவித்துள்ளார்.

இதேவேளை -

எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த சிரேஷ்ட மாணவர்களுக்கான விரிவுரைகளும் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

## இளம்பெண் கொலை

திருகோணமலை அன்புவழிபுரம் சந்திப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் மாலை இளம் பெண் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

25 வயதுடய கிருஷாந்தன் ரேணுகா என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இந்த யுவதியை துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்று விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொலையுண்ட யுவதியின் சடலம் திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக உப்புவெளிப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


முகாமைத்துவ உதவியாளர் போட்டி பரீட்சை வழிகாட்டி நூல் விற்பனையில்

தொகுப்பு: த.தவசேகர் (B.Sc, P.G.D.E, P.G.D.P)
ஆசிரியரின் வகுப்புகளிலும்
பிரபல புத்தக நிலையங்களிலும்
இன்று முதல் கிடைக்கும்.
(சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டுள்ளது)
இப்பரீட்சைக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன.
பிரிவு I சனி, ஞாயிறு 11.30-1.30 D.M.I யாழ். நகர்
பிரிவு II திங், புதன், வியா காலை 6.45-7.45 Science Hall கன்னாதிட்டி.

நாளை ஆரம்பம்

யாழ்/ பல்கலைக்கழக முதலாம் வருட (1st year) மாணவர்களுக்கான

ENGLISH CLASSES

(E.S.L. Level 1) (சனி - 12.00 மணி)
A/L 2007, 2008
ஆரம்பம் 01.07.06 (சனி 11.00 மணி)
G.A.Q/ Part I/ 1st in com: மாணவர்களுக்கான நேர விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

By: VISWANATHAN

விக்னா கல்வி நிறுவனம்
52.ஸ்ரான்லி வீதி, யாழ்.

வீடு வாடகைக்கு

*திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, அம்மன் வீதியில் 200 மீற்றர் தொலைவில் மாடி வீடும், சிறிய வீடும் வாடகைக்கு உண்டு.*

தொடர்பு: க.வேலாயுதன்
பழங்கிணற்றுப் பிள்ளையார் கோயிலடி,
கலாசாலை வீதி. திருநெல்வேலி.


## மரண அறிவித்தல்

### வெற்றிவேலு கெங்காதேவி

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் சிறுவிளானை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலில் வசித்து வந்தவருமாகிய வெற்றிவேலு கெங்காதேவி அவர்கள் நேற்று (29.06.2006) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு - அன்னம்மா தம்பதியரின் புதல்வியும் கெங்கா- குலரட்ணத்தின் சகோதரியும் சுப்பிரமணியம் - சிவபாக்கியத்தின் பெறாமகளும், புஸ்பராணி, புண்ணியசீலன், சத்தியசீலன், சாவித்திரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், மகேந்திரவர்மன் (லண்டன்), யமுனா, தயாநிதி, குகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், கோமதி (ஆஸ்திரேலியா), வர்மேந்திரன், இந்துமதி, ஜெயமதி ஆகியோரின் பெரியதாயும், கேதராணி, நர்த்தனி, கோகுலபிரசாத் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1மணிக்கு கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சவனப் வீதி, தகவல்:
கோண்டாவில். குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம் 15 * 11 * 1918*



*மறைவு 04 * 07 * 2003*

*அமரர்*

### கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

(கிருஸ்ணபிள்ளை அன் சன்ஸ்- நாச்சிமார் கோயிலடி)

திதி : பஞ்சமி 30.06.2006

*எம்மைப் பிரிந்து மூன்று ஆண்டு*
*சென்றாலும் உங்கள் நினைவலைகள்*
*என்றென்றும் எமை விட்டு அகலாது.*

*601/2, காங்கேசன்துறை வீதி,*
*நாச்சிமார் கோயிலடி.* (51714) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் இராசரெத்தினம்

(துரையண்ணை)

உடுவில், முருகமூர்த்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இராசரெத்தினம் அவர்கள் சனிக்கிழமை 24.06.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், அரியகுட்டி - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், நல்லம்மாவின் அன்புக் கணவரும், குலேந்திரன் (கனடா), வரேந்திரன்(ஜேர்மனி), விஜேந்திரன் (கனடா), நிருபேந்திரன் (சுவிஸ்), ராஜினி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரஜனி(கனடா), சுமதி(ஜேர்மனி), சாரதாதேவி(கனடா), மகாதேவி (சுவிஸ்), பாலச்சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஐங்கரன் (கனடா), கோபிஸ் (ஜேர்மனி), சாயி (ஜேர்மனி), கஜேந்திரன் (கனடா), சவீனா(கனடா), சோனியா (கனடா), நிதூரன் (சுவிஸ்), மீனுகை (சுவிஸ்), பாவனா(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகமூர்த்தி கோயிலடி, *தகவல்:*
உடுவில். (51715) குடும்பத்தினர்.

### திருமதி இராசையா நல்லம்மா

கச்சேரி-நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா நல்லம்மா நேற்று (29.06.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், சீதாலட்சுமி, பத்மநாதன் (முன்னாள் கிளை மேற்பார்வையாளர், யாழ்.ப.நோ.கூ.சங்கம்), மீனலோசனி, கருணாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காசி விஸ்வநாதன் (எவரெஸ்ட் பல்பொருள் வாணிபம்), பராசக்தி, நடராசா (முன்னாள் சாலைப் பரிசோதகர், C.T.B), மங்களாதேவி ஆகியோரின் மாமியும், பத்மலோசனி(கனடா), பாஸ்கரன் (ஜேர்மனி), கமலாசினி (கனடா), சுதர்சினி, நந்தகுமார், முகுந்தன், அபிராமி, மதுரன், மாயவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2006) வெள்ளிக்கிழமை பி.ப 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
இ.பத்மநாதன் (மகன்)
[முன்னாள் கிளை மேற்பார்வையாளர் யாழ்.ப.நோ.கூ.ச]

*4/8, மூத்த விநாயகர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (51723)

### திருமதி இராசமலர் கந்தையா



'தாயகம்' பெற்றோல் நிலைய ஒழுங்கை சிக்னல் மரத்தடி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம், ஆத்திசூடி வீதி 150 ஆம் இலக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமலர் கந்தையா 29.06.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் - அழகியம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற ஆசை கந்தையாவின் அன்பு மனைவியும் திருமதி குணமணி சின்னத்தம்பி, திருமதி நேசமணி வேலுப்பிள்ளை, திருமதி மகேஸ்வரி அண்ணாமலை, தனபாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் சின்னத்தம்பி, வேலுப்பிள்ளை, அண்ணாமலை, தனநாயகி ஆகியோரின் மைத்துனியும் புஸ்பராணி, கருணதாஸன் (பிரான்ஸ்), கருணாதேவி விஜயதாஸன் (பிரான்ஸ்), விஜயதேவி (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெயராணி (ஆசிரியை), ஜெய தாசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பிரேமதாசன் ஆகியோரின் தாயும் கமலசேகரம் (தேசிய சேமிப்பு வங்கி), ராதிகா (பிரான்ஸ்), திலகதாஸன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), சிவலிங்கம்(சுவிஸ்), வரதராசா, ஐறின் ஆகியோரின் மாமியும் திருமதி நிருஜா குலம்(லண்டன்), சந்தியா (யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி), கபில்ஜா(வேம்படி மகளிர் கல்லூரி), ஸாசமப்பிரியன், சாமரசன் (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி), சாமகஷன் (யாழ்இந்து ஆரம்பப் பாடசாலை), பிருந்தா(சுவிஸ்), பிரேந்திரா(சுவிஸ்), பிதுர்ஷன் (பிரான்ஸ்), நிலானி(பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (30.06.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
திருமதி புஸ்பராணி கமலசேகரம் *(மகள்)*

*150, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம் மேற்கு,யாழ்ப்பாணம்.* (51714)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காணிப்புக்குழு விவகாரம் குறித்து அரசுடன் நோர்வே பேச வேண்டுமாம்!

கொழும்பு, ஜூன் 30

"இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகள் மாற்றப்பட வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகள் நோர்வே அரசிற்கு விடுத்திருக்கும் வேண்டுகோளை நோர்வே அரசு ஒருதலைப்பட்சமாக நிறைவேற்ற முடியாது. அது தொடர்பாக நோர்வே அரசு இலங்கை அரசுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

- இவ்வாறு அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பாலித கோஹென தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் உள்ள அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் புலிகளின் ஒருதலைப்பட்ச விருப்பத்தின்படி நியமிக்கப்படவில்லை. புலிகளினதும், இலங்கை அரசினதும் விருப்பத்தின்படியே நியமிக்கப்பட்டனர்.

புலிகள் அவர்களை நீக்க வேண்டும் என நோர்வேயிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதானது முறையற்ற ஒன்று. இது தொடர்பாக ஒஸ்லோவில் நோர்வே பரிசீலணை செய்து வருகிறது. அவ்வாறு பரிசீலணை செய்து புலிகள் கேட்டுக்கொண்டதற்கமைய கண்காணிப்புக் குழுவினரை நோர்வேயால் மாற்றமுடியாது.

இது தொடர்பாக நோர்வே இலங்கை அரசுடன் கலந்தாலோசிக்க வேண்டும். புலிகளினதும், அரசினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டமைபோல், அவர்கள் நீக்கப்படுவதற்கும் புலிகளும் அரசும் இணக்கம் தெரிவிக்கவேண்டும்.

அரசைப் பொறுத்தவரை கண்காணிப்பாளர்களை நீக்கவேண்டிய தேவையில்லை. அவர்களின் செயற்பாட்டுக்கு இடையூறு விளைவிக்காமல் அரசு அவர்களுக்கு உதவி வருகிறது.

இதுதவிர, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் அரசு மிகவும் பேணிப் பாதுகாத்து வருகிறது. புலிகள்தான் அதைக் கடுமையாக மீறிவருகின்றனர். தமிழர்களைத் கொலைசெய்தே அவர்கள் யுத்த நிறுத்த மீறலை தொடங்கிவைத்தனர்.

இப்போது அரசியல் தலைவர்களையும் படைத்தளபதிகளையும், படைச் சிப்பாய்களையும் கொலை செய்து யுத்த நிறுத்த மீறலைத் தொடர்கின்றனர்.

அவர்கள் மேற்கொண்டு வருபவை அனைத்தும் பயங்கரவாதச் செயல்கள் என்பதாலேயே பல சர்வதேச நாடுகள் புலிகளைத் தடை செய்தன. இன்னும் பல நாடுகள் தடைசெய்யவுள்ளன.

அரசு இன்னும் புலிகளுடன் பேசிப் பிரச்சினையைத் தீர்க்கவே விரும்புகிறது. அதற்கான அழைப்பிதழை அரசு புலிகளின் மேசைமேல் என்றைக்கோ வைத்துவிட்டது. அவர்கள் உடனடியாகப் பேச்சுக்கு வரவேண்டும் என்பதே அரசின் விருப்பம்.

- என்று கூறினார் பாலித கோஹென.

## யாழ்.,கிளிநொச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டனர்.

இந்த அமைப்பின் தலைவராக ஜனாப் எம்.யு.எம்.தாஹீர், செயலாளராக மௌலவி எஸ்.எம்.ஸாஹீல், பொருளாளராக மௌலவி எம்.பாஹீர் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் உபசெயலாளராக மௌலவி பாஹீகும் நிர்வாக சபை உறுப்பினர்களாக எஸ்.எச்.அஸ்மி, எம்.அஜ்வாத், எம்.எம். சுலைமான், ஏ.சி.மாகீர், ஏ.நவாஸ், பி.எஸ். எம்.ரபுல் அனாம், ஏ.ரசீக், எம்.அஸன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கண்காணிப்புக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸன், சமாதான முயற்சிகளுக்கான விசேட தூதர் ஹன்ஸன் போவர் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகளது செயற்பாடுகள், தற்சமயம் உருவாகி இருக்கும் நெருக்கடி நிலையில் கண்காணிப்புக் குழுவினர் பணியைத் தொடர்வதிலுள்ள சிக்கல்கள், ஆபத்துகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

எனினும், கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் ஐந்து நோர்டிக் நாடுகளினதும் தகுதி நிலையில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்று நோர்வே அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"இலங்கையின் களநிலைவரம் தொடர்பாக ஒருவருக்கு ஒருவர் தகவல் பரிமாறிக் கொள்ளும் வகையில் இன்றைய கூட்டம் அமைந்தது. நோர்டிக் நாடுகளின் தகுதி நிலையில் இப்போது எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை" - என்று நோர்வே வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒட்ஸ் நட்ஸ்டல் தெரிவித்தார்.

இதேவேளை -

போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்படுமாயின் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளினதும் ஒப்புதல்களையும் பெற்றபின்னரே செய்யப்படும் என்று இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஹன்ஸன் போவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்துள்ள நோர்டிக் நாடுகளைச் சேர்ந்தவர்களை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறக்கூடாது என்ற நிலையை விடுதலைப் புலிகள் மறுபரிசீலணை செய்யவேண்டும் என்ற கோரிக்கை நேற்றைய கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது என்றும் -

டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் இலங்கைச் சமாதான முயற்சிகளுக்குத் தங்களுடைய முழு நம்பிக்கையை வெளிப்படுத்தின எனவும் -

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கும் போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கும், அதை நடைமுறைப்படுத்தும் கண்காணிப்புப் பணிகளுக்கும் தொடர்ந்தும் பங்காற்ற அந்த நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன என்றும் - போவர் கூறினார் என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

எதிர்காலத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு இருக்கக்கூடிய பல்வேறு சாத்தியக்கூறுகள் குறித்தும் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இவை குறித்து இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் தத்தம் நாடுகளுக்குத் தெரியப்படுத்துவர். பின்னர் அந்த நாடுகளின் பதிலை அவர்கள் எங்களிடம் தெரிவிப்பர் என்றும் ஹான்ஸன் போவர் கூறியிருக்கிறார். (ஐ)

## தயா சந்தகிரி நியமன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள், சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

மனுவில் மனுதாரர் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு:-

பொதுநலன் கருதி இந்த மனு தாக்கல் செய்யப்படுகின்றது.

அமைச்சு ஒன்றின் செயலாளர் பதவிக்கு உரியவர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் என்ற ஒரு பதவி நிலையும் இல்லை. அதற்கு ஆட்களை நியமிக்கும் அதிகாரமும் அமைச்சரவைக்கோ, ஜனாதிபதிக்கோ கிடையாது.

அமைச்சு ஒன்றின் செயலாளர் பதவி தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கு அரச சேவை ஆணைக்குழுவே ஆட்களை நியமிக்க வேண் டும். அப்படி இருக்கையில் இல்லாத ஒரு பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

அது மாத்திரமல்ல, தயா சந்தகிரிக்கு எதிராக சுமார் 40 கோடி ரூபா ஆயுதக் கொள்வனவு ஊழல் விவகார விசாரணை நடந்து வருகின்றது. அத்தகைய ஒருவரை பாதுகாப்பு அமைச்சில் பொறுப்பான பதவி ஒன்றை உருவாக்கி அதில் அமர்த்துவது அந்த விசாரணையைக் குழப்பும். அது நீதியாக நடைபெறுவதைப் பாதிக்கும்.

- இவ்வாறு மனுதாரர் தெரிவித்த வாதங்களை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

மேற்படி ஊழல் விசாரணைக்கு சட்டமா அதிபரே இசைவு தெரிவித்துள்ளார். இந்த நிலையில் இப்படி ஒரு பதவியில் எதிர்மனுதார் அமர்ந்தால் விசாரணைக்கு உதவுவோர் பெரிதும் பாதிக்கப்படுவர். நீதியான விசாரணை தடைப்பட வாய்ப்புண்டு. - எனக் கருத்துத் தெரிவித்த பிரதம நீதியரசர், இந்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணைகள் முடிவுற்று இறுதித் தீர்வு வெளியாகும் வரை பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் பதவியில் எதிர்மனுதாரர் நீடிப்பதற்கு இடைக்காலத்தடை விதித்து உத்தரவு வழங்கினார்.

மனு மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர் 13ஆம் திகதி நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

மனுதாரர் தரப்பில் சட்டத்தரணி டபிள்யூ. கே. விஜேயவர்த்தனவும், சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டத்தரணி இந்திகா தேவமுனி சில்வாவும் ஆஜராகினர். (உ)

## நவாலியில் சூடு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுக்கு அருகில் உள்ள கோயிலுக்கு இவர் சென்று திரும்பிய வேளையில் இனந்தெரியாத ஆயுததாரிகள் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டார் எனக் கூறப்பட்டது.

அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் சிகிச்சை பெற்று வருகின்றார். (78)

## அரசின் பொறுப்பற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் கஷ்டங்களுக்கு, வேதனைகளுக்கும் முகம்கொடுத்து வருகிறார்கள் என்றும், அவர்களின் இந்த அவல வாழ்வுக்கு விடுதலைப் புலிகளும், அரசாங்கம் மற்றும் இதர ஆயுதக் குழுக்களுமே காரணம் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை லண்டனிலிருந்து வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையொன்றில் குற்றஞ்சாட்டியுள்ளது.

வன்செயல்கள் தீவிரமடைந்ததன் காரணமாக கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதிக்குப் பின்னர், வடக்கு - கிழக்கில் மட்டும் 40 ஆயிரம் பேர் இடம்பெயர நேர்ந்திருக்கிறது என்றும் அறிக்கையில் மன்னிப்புச் சபை சுட்டிக் காட்டியிருக்கிறது.

பெருகிவரும் வன்செயல்கள், இடம்பெயரும் மக்கள் அலையைப் புதிதாகக் கிளப்பியிருக்கிறது. மோதல்கள் காரணமாகவும், பேரலை அனர்த்தத்தாலும் ஏலவே இடம்பெயர்ந்து வாழும் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் பெரும் பயப்பீதியையும், பாதுகாப்பற்ற தன்மையையும் இது ஏற்படுத்தி வருகிறது.

போதிய பாதுகாப்பை வழங்குவதற்கு அரசு தவறிழைத்து வருவதும், பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொள்வோரைக் கண்டறிந்து சட்டத்தின் முன் அவர்களை நிறுத்தித் தண்டனைக்கு உள்ளாவதை உறுதிப்படுத்துவதற்கு அரசு தவறுவதும், மக்கள் மத்தியில் பரந்துபட்ட அளவில் பெரும் பயத்தையும், பீதியையும் ஏற்படுத்தி வருகிறது. இதனை சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய - பசுபிக் பணிப் பாளரான பூர்ணா சென் என்பவரே கூறுகிறார். சமீப சில மாதங்களாக நடந்த பாரிய தாக்குதல்கள் ஒவ்வொன்றும், மக்கள் மத்தியில் பெரும் கிலியை உண்டு பண்ணி, வீடு வாசல்களையும், கிராமங்களையும் விட்டு வெளியேறி வேறு இடங்களில் அபயம் தேடி ஓட வைத்துள்ளன.

இவ்வாறு இடம்பெயர்ந்து, முகாம்களிலும் வேறு புகலிடங்களிலும் வாழ்வோர் கூட, வன்செயல்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய பரிதாப நிலையிலேயே இருக்கிறார்கள்.

...தோடு, விடுதலைப் புலிகள் மற்றும் இதர ஆயுதக் குழுக்களினதும் ஏன் இலங்கை பாதுகாப்புப் படை உறுப்பினர்களினதும் தொல்லைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

கடந்த ஜூன் 17 ஆம் திகதி, பேசாலையிலுள்ள தேவாலயம் ஒன்றுக்குள் கைக்குண்டுகள் வீசப்பட்ட பொழுது, அங்கு புகலிடம் தேடிய பெண் ஒருவர் கொல்லப்பட்டார். வேறு 44 பேர் காயமடைந்தனர். இந்த கைக்குண்டுத் தாக்குதலை பாதுகாப்புப் படை உறுப்பினரே மேற்கொண்டார். இதனை நேரில் கண்டவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சாட்சியமும் கூறியிருக்கிறார்கள்.

ஒரு முறை இடம்பெயர்ந்தோர் மீண்டும் மீண்டும் இடம்பெயரும் சம்பவங்கள் தொடர்வதால், மக்கள் மத்தியில் பாதுகாப்பு இல்லா உணர்வு அதிகரித்து வருவதும் அவதானிக்கப்பட்டிருக்கிறது என்று சர்வதேச மன்னிப்புச் சபை பிறிதொரு அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையதாகும். ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இவ்வாறு உள்ளூரில் இடம்பெயர்ந்து இருக்கிறார்கள். நாட்டின் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருவதால், இந்த மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய கடப்பாடும் அரசுக்கே இருக்கிறது என்று பூர்னா சென் மேலும் தெரிவித்திருக்கிறார் என்றும் அறிக்கை குறிப்பிடுகிறது.

## இரத்தினபுரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலாக வெடித்தது என்று தமிழர் தரப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்க் குடும்பங்கள் வசித்து வந்த அறுபதுக்கும் மேற்பட்ட வீடுகள் தாக்கிச் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. வீடுகளில் இருந்த பெறுமதியான பொருள்களும் அடித்து நொருக்கப்பட்டிருக்கின்றன.

பாதுகாப்புக்காக அங்குள்ள இந்து ஆலயம் ஒன்றில் தங்கியுள்ள நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு சமைத்த உணவு வழங்கு வதற்கு அப்பகுதி பிரதேச செயலரும், பொலீஸ் அதிகாரிகளும் நேற்று ஏற்பாடுகளைச் செய் திருந்தனர்.

தாக்குதல்கள் இடம்பெற்ற பம்பேகமுவ தோட்டத்திலும் ஏனைய தோட்டப் பகுதிகளிலும் பதற்றம் நிலவுகின்றது. தோட்ட மக்கள் வீதி களில் நடமாட அஞ்சுகின்ற அளவுக்கு நிலைமை மோசமாகக் காணப்படுவதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

பதற்றத்தைத் தணிப்பதற்காக இரண்டு இனங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளையும் அழைத்து கலந்துரையாடுவதற்குப் பொலீஸார் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஜனாதிபதியின் உத்தரவை அடுத்து சுகாதாரப் பிரதி அமைச்சர் வடிவேல் சுரேஷ் நேற்று பம்பேகமுவ தோட்டப் பகுதிக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துப் பேசினார்.

பம்பேகமுவ உட்பட எல்லாத் தோட்டங்களிலும் தமிழர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அவர் தெரிவித்தார். எனினும், தோட்டப் பகுதிகளில் இன்னமும் பதற்றம் நீடிக்கின்றது. (ஐ)

SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள்
பிரிவு II ஆரம்பம் 01.07.2006
Special Offer 2000/=
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க,
A/L மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
DIPLOMA IN PROFESSIONAL MS OFFICE 2003 4 Months
DIPLOMA IN DESKTOP PUBLISHING 4 Months
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING 4 Months
DIPLOMA IN NETWORK ENGINEERING 4 Months
DIPLOMA IN WEB DESIGNING 4 Months
DIPLOMA IN COMPUTER SCIENCE 6 Months
DIPLOMA IN INTERNET E-MAIL 2 Months
Softview Computer College
Head Office :- 43, Arasady Road, Jaffna.
Branch :- 55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170, 0777846811

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்
A/L 2008
பொது இரசாயனம்
ஆசிரியர்
திரு.N.மகேஸ்வரன்
ஆரம்பம் : 01.07.2006 சனி 5.30 pm

NEW SCIENCE CENTRE
யாழ் நகர்
PHYSICAL CHEMISTRY
ஆரம்பம் : 02.07.06 ஞாயிறு 11 am
ORGANIC
Sat, Sun 1-2 pm
DAY BATCH
Mon - Fri 8.15 - 9.45 am

COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்.
O/L ENGLISH
Paper Class
10 Years Papers
Sat, Sun 11 am, 4pm, 5pm

COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்.
SPOKEN ENGLISH/ GRAMMAR
பேச, எழுத, வாசிக்க அடிப்படையில் இருந்து
ஆரம்பம் 01.07.2006
Batch I II III IV
Sat, Sun 8 am 9 am 10 am 3 pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.